உ
சிவமயம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

இந்துசாதனம்

விசேஷ
விளம்பரத்திற்கு!

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௧] யாழ்ப்பாணம்:— விஷு௵ வைகாசிமீ ௨0௳ (1941 ஜூன் 2 திங்கட்கிழமை) [இலக்கம் ௧௫]

தாய் மொழி

தி. ஜா, சுப்பிரமண்யம்

எங்கள் ஊர் ஒரு பட்டிக்காடு; சுற்றுப்பக்கம் பத்து மைல் தூரத்துக்குப் பெரிய வூராவது நகரமாவது கிடையாது. அவ்வளவு ஒதுக்குப் புறமாயுள்ள அந்த ஊரிலும் நாகரிகம் புகுந்துவிட்டது. என்றாலும் அதற்கு எட்டாதவையும் சில உண்டு.

ரயில் வண்டியையே பார்த்திராத ஜனங்கள் நாட்டுப் புறங்களில் இன்னும் இருக்கிறார்கள் என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். ஆனால் இருக்கிறார்கள். எங்கள் பாட்டியும் அவர்களுள் ஒருத்தி. அவள் ரயில் வண்டியை மட்டுமல்ல, மோட்டார் பஸ்ஸையும் பார்த்தது கிடையாது.

அவள் எந்த வண்டியிலும் ஏறமாட்டாள். கட்டைவண்டியில் பிரயாணம் செய்தாலும் அதன் குலுக்கல் தாங்காமல் கஷ்டப்படுவாள். எந்த ஊருக்கும் அவள் நடந்தே செல்லுவாள். அப்படி எவ்வளவு தூரம் போகமுடியும்? ஊர் எல்லையைத் தாண்டி ஐந்தாறு மைல்களுக்கு மேல் அவள் போனதே கிடையாது.

சமீபத்தில் நான் அந்தப் பாட்டியைப் பார்க்கப் போயிருந்தேன். அவளுக்கு வயது எண்பதைக் கடந்தது. கண் தெரியாது. காதும் கேட்காது. அதனால் வீட்டில் உள்ளவர்கள் அவளை அலக்ஷியப்படுத்தி வந்தார்கள். ஏழு எட்டு வருஷங்களுக்கு ஒரு முறை அவளைப் பார்க்கப் போகும் நான் அவள் பக்கத்தில் உட்கார்ந்து ஹிதமாகப் பேசுவது வழக்கம்.

'என்டா, நேத்திக்கே வரேன்னு எழுதியிருந்தயே, ஏன் வல்லே' என்று கேட்டாள் பாட்டி.

'பஸ் வழியில் பஞ்சராப் போயிடுத்து, பாட்டி. அதான் முடியல்லே' என்று பதில் சொன்னேன் நான்.

பாட்டிக்கு, பஸ், பஞ்சர், என்ற வார்த்தைகள் விளங்கவில்லை. அவளுக்கு அவற்றை விளக்கிக் கூறினேன்.

'மோட்டர் வண்டிச் சக்கரம் ஓட்டையாய்ப் போயிடுத்துன்னு சொல்லேண்டா. பஸ் தன் என்ன வார்த்தை?' என்று சொன்னாள் அவள்.

உடல் தளர்ந்து ஊனங்கள் ஏற்பட்ட பின்னும் அவளுக்கு உலக சமாசாரத்தை அறிய, வம்புப் பேச்சுப் பேச ஏற்பட்ட ஆசைமட்டும் தணியவில்லை.

பக்கத்து ஊர் ஒன்றில் டேரா அடித்துச் சினிமா காட்டி வந்தார்கள். அதைப் பார்க்க ஊர் முழுவதும் திரண்டு செல்லும். ஆனால் என்னுடைய பாட்டி அதைப் பார்த்ததில்லை. அதைப்பற்றி முழு விவரங்களையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று மட்டும் ஆசை உண்டு. அதனால் அவள் என்னிடம் சினிமாவைப் பற்றிக் கேட்டாள்.

'அது 'தோல் கூத்து' இல்லே, பாட்டி. நிழல் படம் ஆடறது. நீ முன்னே பார்த்திருக்கே, பாரு. திரைக்குப் பின்னாடி ஆடற 'பொம்மலாட்டம்' அந்த மாதிரி ஒண்ணு. ஆனால் படத்திலேயே பேச்சு, பாட்டு எல்லாத்தையும் சேர்த்திருக்கும்' என்று அவளுக்கு விளக்கிக் கூறினேன்.

அவள் ஊரில் வளையவந்து அதிகாரம் செலுத்தியது வெகு காலத்திற்கு முன். அந்தக் காலத்தில் மோட்டார், சினிமா ஆகியவை கிடையாது. அவள் காலத்தில் வழக்கில் இலலாத புதிய வார்த்தைகள் பல இப்பொழுது வழக்கில் வந்துவிட்டன. அதேபோல, அப்பொழுது பேச்சு வழக்கில் இருந்த பல வார்த்தைகள் இப்பொழுது மறைந்துவிட்டன.

நம் தாய்மொழி உலகத்திலுள்ள மற்றப் பாஷைகளைப் போலவே நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது. ஒவ்வொரு நாளும் பல புதிய வார்த்தைகள் உண்டாகின்றன. அதனை ஜீவன் உள்ள பாஷை என்றே சொல்லவேண்டும். அதனால் இறந்து மறைந்த பலவார்த்தைகள் உயிர்பெற்று வழக்கில் வருகின்றன.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்கு அனுப்புவதைத் தெரிவிக்கும் 'அஞ்சல்' என்னும் வார்த்தை தமிழ் நாட்டிலே வழக்கு வீழ்ந்துவிட்டது. ஆனால் மலையாளத்தில் அது இன்றைக்கும் உபயோகத்தில் உள்ளது. அங்கே 'தபாலை' அஞ்சல் என்றுதான் சொல்லுவார்கள். ஒரு காலத்தில் மறைந்த இந்த வார்த்தை ரேடியோ ஏற்பட்டதும் மறுபடியும் புத்துயிர் பெற்றுவிட்டது.

நம் பாஷையில் இப்பொழுது வந்து சேர்ந்துள்ள வார்த்தைகளுள் பலதிசைச் சொற்கள் பிறமொழியைச் சேர்ந்தவை. ஜன்னல், அலமாரி, கடுதாசி என்பனபோன்றவை சர்வ சாதாரணமாக வழங்கும் சொற்கள் பிறமொழிகளினின்றும் வந்தவைகளே. ஏன், இப்பொழுது தினசரி வழக்கில் உள்ள வார்த்தைகளில் பெரும்பாலானவை திசைச் சொற்களே. சரியோ, தப்போ, அவை வழக்கில் வந்துவிட்டன. அவற்றை இனி, நாம் தள்ள முடியாது.

தமிழ் நாட்டிலேயே ஒரு பாகத்தில் வழங்கும் வார்த்தைகள் மற்றொரு பாகத்தில் இல்லை.

நான் திருநெல்வேலி ஜில்லாவில் வசித்து வந்த காலத்தில் ஒருநாள் எம் குழந்தைக்கு உடம்பு அசௌக்கியமாய் இருந்தது. என்னுடைய தாயார் 'குழந்தைக்கு நுணா இலைக் கருக்கு வைத்துப் போட்டினால் அது நீங்கிவிடும்' என்று சொன்னாள்.

நுணா மரம் வீட்டுக்குப் பக்கத்திலில்லை. ஒரு மைலுக்கப்பால் சாலை ஓரத்தில் வளர்ந்திருக்கப் பார்த்திருந்தேன். அதனால் வீட்டு வேலையாளிடம் நுணா இலை பறித்துவரும்படிச் சொன்னேன். அவன் அப்படிப்பட்ட மரத்தைப் பார்த்ததே கிடையாது என்று சொல்லிவிட்டான். மரத்தையும் அது இருக்குமிடத்தையும் அவனுக்கு விவரமாக விளக்கிக் கூறியவுடன், அவன் 'ஓ தெரியும், தெரியும், மஞ்சனத்தி மஞ்சனுதி மரம் அலை அது. இதோ கொணர்ந்துடறேன்' என்று சொல்லி ஓடி நுணா இலையைக் கொணர்ந்தான்.

தஞ்சை ஜில்லாவிலே நுணா என்று வழங்கப்படும் மரம் திருநெல்வேலி கோயமுத்தூர் ஜில்லாக்களில், மஞ்சணுதி என்பதிலிருந்து திரிந்து வந்த மஞ்சனத்தி என்ற பெயர் பெற்றுள்ளது.

இதே போலத்தான் தஞ்சாவூர் ஜில்லாவில் மருதாணி என்று வழங்கப்படும் மருதோன்றி சென்னைப் பகுதியில் 'அழவனம்' அல்லது 'அழகுண்ணி' என்று குறிக்கப்படுகின்றது. தவிரவும் ஒரே பொருளைக் குறித்து வந்தாலும், இடத்துக்கு இடம் மதிப்பு வேறுபடும் வார்த்தைகளும் உண்டு. உதாரணமாக பைசா என்பது சென்னைப் பகுதியில் காலணாவைக் குறிக்கும். ஆனால் தஞ்சாவூர் ஜில்லாவில் அதன் மதிப்பு ஒரு தம்பிடிதான். அதேபோலத்தான், துட்டு, துக்காணி, பணம், கலம், மரக்கால் என்னும் வார்த்தைகளும்.

இப்படி இடத்துக்குத் தக்கபடி பேச்சு வழக்கில் உள்ள மாறுபாடுகள் காலத்துக்குத் தக்கபடியும் காணப்படுகின்றன.

'எம்மூர்த் தெற்கில் பரமேசுவர வந் நீராயிட்டு காவியுங் களரும் உள்ளிட்டு மற்றும் எப்பேர்ப்பட்ட சாதியும் இசவுருலது அரிதாயிட்டு ......மூக்கோர லகலத்தால் வதிட்டிக் கிழ்க்கடை நீர் போவதாகவும்.'

இதை மலையாளம் போன்ற வேறொரு பாஷை என்று எண்ண வேண்டாம், தமிழ்தான். ஆனால் ஆயிர வருஷங்களுக்கு முன்பு வழங்கி வந்தபடி எழுதப்பட்டுள்ளது. அதையே நாம் இப்பொழுது 'தெற்கே ஜலத்தேக்கம் ஏற்பட்டுவிட்டபடியாலும் பிராணிகள் அங்கே கடமாடுவது அரிதானமையாலும் கிழக்கே வாய்க்கால் வெட்டி நீர் செல்வதாக' என்று எழுதுவோம்.

இந்தத் தொடர் கி. பி. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆண்டு வந்த மதுரை கொண்ட பரகேசரி வர்மன் என்னும் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் உத்தரமேரூர்க் கோவிலில் வெட்டப்பட்ட சாஸனம் ஒன்றில் காணப்படுகின்றது. இந்தத் தொடரில் நீராயிட்டு, அரிதாயிட்டு என்ற வார்த்தைகள் நீர் ஆகிவிட்டபடியால், அரிதாகிவிட்டபடியால், என்ற பொருளைக் கொடுக்கின்றன. அக்காலத்தில் 'ஆயிட்டு' என்னும் சொல், ஆகலான், ஆகிவிட்டபடியால் என்ற பொருளில் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஈடு என்ற திருவாய்மொழி வியாக்யானத்திலும் இந்த வழக்குக் காணப்படுகின்றது. பழைய சாஸனங்களையும் ஈடுபோன்ற வியாக்கியானங்களையும் நன்றாகக் கவனித்தால் அவற்றை எழுதியவர்கள் அந்தக் காலத்துப் பேச்சு வழக்கிலேதான் அவற்றை எழுதியிருக்கிறார்கள் என்பது தெரியும். அதுதான் வசனத்தின் உண்மை லக்ஷணம்.

உரைநடை வசனம் ஆகிய வார்த்தைகள் ஒரே பொருளைக் கொடுப்பனவாகும். வாய் மொழியாகப் பேசுவதை அதைக் கேட்காதவர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு எழுதிக் காண்பிப்பதையே அவை குறிக்கும்.

ஆனால் உரைநடையில் இலக்கியங்களை எழுதவந்தவர்களில் சிலர் அந்த லக்ஷியத்தையே மறந்துவிட்டார்கள்; செய்யுள் நடையையே பின்பற்றினர். செய்யுள் நடை வழக்கு வீழ்ந்ததும் அதன் படிப்பு மட்டும் போகவில்லை.

—தொடரும்.

"வாகீசன்"

இந்தியாவின் அடுத்த ராஜப்பிரதிநிதி?

லண்டனிலிருந்து உத்தியோகப் பற்றற்ற தூது

மிஸ்றர் அமெரியின் மனப்போக்கு

ஸிம்லா, மே 26

'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிகையின் லண்டன் நிருபர் இப்போது லண்டனில் ஸேர். ரொபேர்ட் வன்ஸிடார்ட் இந்தியாவுக்கு உத்தியோகப் பற்றற்ற முறையில் தூது வருவதுபற்றிப் பரவும் வதந்தியை எடுத்துச் சொல்லியிருக்கிறார். ஸேர் ரொபர்ட் சென்றவாரம்வரை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு ராஜிய ஆலோசனை சொல்பவராகவிருந்தார்.

வைஸ்ராய் பதவி

ஒருவருஷத்துக்குமுன் இந்தியாவுக்கு லோர்ட் லின்லிதோவுக்குப் பிறகு யாரை வைஸ்ராயாக நியமிப்பதென்ற பேச்சு வந்தபோது, சிலர் ஸேர். ரொபர்ட் பெயரைப் பிரஸ்தாபித்தார்கள். லோர்டு லோதியன், லார்டு லாயிடு ஆகியவர்களை பெயர் பிரஸ்தாபிக்கப்பட்டபின், மேற்கண்டவரைப் பற்றிய பேச்சுக் குறைந்துவிட்டது. கடைசியாக லோர்டு லோதியனை நியமிக்கலாமென்ற முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது. ஆனால், மேற்கண்ட இருவரும் இறந்துபோனமையால், லோர்டு லின்லிதோவுக்குப் பின் யாரை நியமிப்பதென்ற யோசனை மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. இது சம்பந்தமாகத் திவான்ஷயர் பிரபுவின் பேர் சிலவிடங்களிற் பிரஸ்தாபிக்கப்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியாவின் ஆதிக்கத்தையும் சமஸ்தானங்கள் உள்ளிட்ட நாட்டின் நிருவாகத்தையும் பிரித்துவிட வேண்டுமென்ற எண்ணமும் இருக்கிறது. லோதியன் கொமிற்றியில் வயதில் இளையவராகவிருந்த டப்பசில பிரபுவின் பெயரும் இடையிடையே பிரஸ்தாபிக்கப்படுகிறது.

இந்தியாவுக்குத் தூது

சமீபத்தில் பாராளுமன்றத் தூதுக்கோஷ்டி இந்தியாவுக்கு வருமென்றும் ஒரு செய்தி வெளியாயிற்று. அந்தத் தூதுக் கோஷ்டி வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, அடுத்த மாரி காலத்தில் மிஸ்டர் கைவிண்ட் இந்தியாவுக்கு வருவது நிச்சயம். இதற்குமுன் இந்தியாவின் தலைமையில கருத்துக்கொண்டவர்களுடன் அவர் மூன்றுமுறை இந்த நாட்டில வந்து தங்கியிருக்கிறார். இங்கிலாந்திலுள்ள வாலிபர்களைக் கொண்டு இந்தியாவுக்கு நிரந்தர அரசியல் அமைக்கும் வேலையில்விட கர்னல் அமெரி முனைந்திருப்பதாகத் தெரிகிறது. இதை அனுசரித்தே அவர் தாமே மிஸ்டர் ஹாட்சனைச் சீர்திருத்தக் கொமிஷனராக நியமித்தார்.

மனிதர் மாமிசத்தை மனிதர் உண்பது

நாகக்குன்றில் சம்பவம்

பெங்களூர், மே 26

கால்நடையாக உலகச் சுற்றுப் பிரயாணஞ் செய்வதற்காக 1934 ஆம் வருஷம் ஏப்ரல் 4ம் தேதி புறப்பட்ட ஸ்ரீமான் கே.எம்.பிள்ளை (திருவாங்கூர்), ஸ்ரீமான் வி. குணவர்த்தனா (இலங்கை) ஸ்ரீமான், சங்கர் (சிங்கப்பூர்) ஆகியோர் பங்களூர் வந்திருக்கின்றனர். இவர்கள் சிங்கப்பூர், மலேயா, சீனா, பர்மா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கின்றனர், வட இந்தியாவிலும் சுற்றுப் பிரயாணஞ் செய்திருக்கின்றனர். நாகக்குன்றுகளில் நாகர்களால் தாங்கள் பிடித்துக்கொள்ளப்பட்டதாகவும், நாகர்கள் தங்களில் ஒருவரைக் கொன்று தின்றதைப் பார்த்ததாயும் அன்றிரவு தாங்கள் மணிபுரா சமஸ்தானத்திற்குத் தப்பி ஓடி வந்ததாயும் அவர்கள் தெரிவித்தனர்.

ஆஸ்பத்திரிச் சிப்பந்திக்கு அம்மைநோயா?

தொற்றுநோய் முகாமுக்கு அனுப்பப்பட்டார்

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியைச் சேர்ந்த மாணவ சிப்பந்தியாகிய எம். எட்வின் பெரேரா என்னும் பெயருள்ளவர் அங்கொடைத் தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டிருக்கிறார். இவருக்கு அம்மைநோய் தொற்றியிருக்கக்கூடுமென்று சந்தேகிக்கப்படுகிறது. பெரிய ஆஸ்பத்திரியைச் சேர்ந்த 2-வது ஆண்கள் வார்ட்டில் ஷெடி சிப்பந்தி வேலை பார்த்து வந்ததாகவும் குறித்த வார்ட்டில் ஒருவருக்கு அம்மை நோய் பிடித்திருந்தமை சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

"நாட்டுக்கு நல்லவழி காட்டவில்லை"

மகாத்மாமீது பழி சாட்டுகிறார்

பதவி ஏற்கக் காங்கிரசுக்கு விண்ணப்பம்

முன்ஷிகஞ், மே 25

தீவிர ஜனநாயகக் கட்சியின் ஆதரவில், இங்கு ஒருமகாநாடு ஸ்ரீ அம்ரேந்திரநாத் சாட்டர்ஜி தலைமையில் நடந்தது.

அவர் இந்தியாவிலுள்ள பற்பல கட்சித் தலைவர்களையும் ஒன்றுகூட்டி அவர்களது ஆலோசனையைக் கேட்டுப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் நடக்கவேண்டும் எனக் கூறினர்; அதோடு அவர் இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் மகாத்மா காந்தி சரியான வழி காட்டத் தவறிவிட்டார் என்றும், யுத்தம் வெற்றிகரமாக இப்போது இந்தியர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறினர்.

நாஸிகள் ஜெயித்தால்

நாஸிகள் ஜெயித்தால் இந்தியருக்குப் பெரும் பாதகம் ஏற்படுமென்றும் நாஸிகளைத் தொலைக்க வேண்டுமானால், இந்தியருக்குத் தக்க இராணுவப்பயிற்சி அளிக்க வேண்டுமென்றும் அப்போதுதான் விரோதிகள் இந்த நாட்டில் வந்தால் அவர்களை எதிர்க்க முடியுமென்றும் அவர் சொன்னார்.

பதவிக்கு வரவேண்டும்

தற்போது தேசாதிபதி ஆட்சி நடத்தும் 7 மாகாணங்களில் மந்திரிசபைகள் ஏற்படவேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள ராஜீயநெருக்கடியைத் தீர்க்க ஐரோப்பியர்களுடங்கிய ஒரு சர்வகட்சி மகாநாடு கூட்டவேண்டும். காங்கிரஸ் தற்போது அனுஷ்டிக்கும் கொள்கையை விட்டு, மந்திரி பதவி ஏற்கவேண்டும். அவர்கள் இப்போது அனுஷ்டிக்கும் கொள்கை நாட்டுக்குப் பாதகம் விளைவிப்பதாகும் எனக் கூறி முடித்தார்.

இம் மகாநாட்டுக்கு ஸ்ரீமான். எம். என். ராயும் ஒரு செய்தி அனுப்பியிருக்கிறார்.

மின்னேரியாத் திட்ட வேலைபற்றி ஆலோசனைகள்

விவசாய நிர்வாக சபையின் முன் சமர்ப்பணம்

மின்னேரியா திட்டத்தின் மூன்றாவது அங்க நிர்மாண வேலைகளை நடத்துவதற்கான ஆலோசனைகள் விவசாய நிருவாகசபை முன்னிலையில் இன்று சமர்ப்பிக்கப்படுமென்று அறியப்படுகிறது.

நிர்வாகசபை அந்த ஆலோசனைகளை அங்கீகரித்தால் ரூபாய் 4,70,000 கடன் தீர்மானமொன்றை விவசாயமந்திரி அரசாங்க சபைக்குக் கொண்டு வருவார். பூர்வாங்கச் செலவுக்காகச் சென்ற வருடத்தில் 40,000 மான்யம் அனுமதிக்கப்பட்டது.

இத் திட்டத்தின்கீழ் 5000 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்ய முதலில் உத்தேசிக்கப்பட்டது. நிலத்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில் மத்தியபகுதிப் பயிர்ச் செய்கைக்குத் தகுதியற்றது என்று தெரியவந்தது.

இப்பொழுது ஏறக்குறைய 350 ஏக்கர் நிலம் பயிரிடப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

பொலநறுவைக் காரியதரிசி இத்திட்டத்திற்கு நிதிசம்பந்தமான ஆக்ஷேபனைகள் எதுவும் தெரிவிக்கவில்லை. ஆயின், பாதைகள், கால்வாய்கள், வடிகால்கள், முதலியன தேவைக்கு அதிகமான அளவில் போடப்படவேண்டியதில்லையென்று ஆலோசனை கூறியிருக்கிறார்.

கீர்த்தி

முன்னொரு காலத்தில் பாதகண்டத்தில் பிரியவிரதன் என்றொரு மன்னன் இருந்தான். அவன் நீதிக்கு மனு. வண்மைக்குக் கன்னன். வாய்மைக்கு அரிச்சந்திரன். வலிமைக்கு வீமன். வீரத்திற்கு விசயன். கல்விக்கு வியாழன். சிவநேசத்துக்குத் திருநீற்றுச் சோழர். அன்ன மகிமைகளையுடைய அவனுக்குக் கீர்த்தி யென்றொரு மனைவியிருந்தாள். அப்பெயருக்கேற்ப நல்ல குணங்களின் வடிவமாகவே அவளும் விளங்கினள். இருவரும் இல்லறம் இனிது நடாத்தி வருங் காலத்தில் அவருக்கிருந்த குறை மகப்பேறின்மை யொன்றுதான். ஆகலின் பிரிய விரதன் கீர்த்தியின் அனுமதி பெற்றுப் பிரபையெனப் பெயரிய வேறொருத்தியை இரண்டாமனைவியாகக் கொண்டான். பிரபை இளமையும் எழிலும் இயைந்து விளங்கினள். இருண்ட சுருண்ட குழல், இளம் பிறைபோன்ற நுதல், நீண்டு அரிபரந்த நேத்திரம், முறுவல் பூத்த முகம், மயூரமன்ன சாயல், அன்னமன்ன மென்னடை ஆகிய இன்னியல்புடைய பிரபை பிரிய விரதனுடன், விளக்குடன் பிரபை யிருப்பது போல் வேற்றுமையின்றி வாழ்ந்து வந்தாள். வெகு சீக்கிரத்தில் அவள் வயிற்றில் ஒரு பிள்ளையும்பிறந்தான். என்னே! அவ்விருவருமடைந்த அளவிலாப் பெருமிதம். அவனுக்கு அவர்கள் இட்டு மகிழ்ந்த பெயர் பதுமநாபன் என்பது. அவன் மேனி பொன்னுருக்கி வார்த்ததுபோ லிருந்தது. கொண்டையிற் கட்டிய பொற்சுட்டி இலங்கியது. நெற்றியிலிட்ட நீறு நிலாக்கான்றது. கனிவாயினூறிய தேறல் மார்பில் வழிந்தோடியது. காதிற் புனைந்த குழையின் செம்மணி இளவெயில் வீசியது. வாயில் இளநகை விளங்கியது. அரையிற் பொன்னுண் மின்னிட்டது. அன்னையும் அத்தனும் அருமந்த நாபனை மாறிமாறி அள்ளியெடுப்பதும், கிள்ளி முத்தமிடுவதும், நெஞ்சோடணைப்பதும், கொஞ்சி மகிழ்வதும், உச்சிமோப்பதும், விலாவிலும் கழுத்திலும் விரல்வைத்தழுத்திச் சிரிப்புண்டாக்குவதுமாயிருந்தனர். பையலின் அழகு வடிவால பெற்றோரின் மையற் பிணிப்பு முன்னையினும் பன்மடங்கு இறுகிவிட்டது.

இஃதிவ்வாறாகக், கோப்பெருந்தேவியாகிய கீர்த்தியின் கவனம் பிரியவிரதனுக்கு அநேகமாக இல்லாமற் போய்விட்டதென்றே சொல்லலாம். பிரபை அவளைப் பகைக்கத் தொடங்கினள். கீர்த்திக்குக் கணவன் கம்பீர முகத்தைக் கண்ணெடுத்துப் பார்த்தலும் கிடைத்தற்கரியதாயிற்று. என்ன செய்வாள்? அவள் தன் ஆசையெல்லாம் ஒடுக்கப் பெற்றுக் கணவனுக்குக் கயிங்கரியமாயினுஞ் செய்து மகிழலாமென உறுதி செய்து சமயம் வாய்த்த போதெல்லாம் அவனுக்கு வேண்டுஞ் சிறுபணிகளாற்றிப் பொழுது கழிப்பாளாயினள். ஒருநாள் விரதனும் பிரபையும் ஒரு சிங்கார அறையில அலங்கார மஞ்சத்தி லுட்கார்ந்து ஆனந்தமாகச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார்கள். பதுமநாபன் சிறிது பொழுது தாய் மடியிலுஞ் சிறிது பொழுது தந்தை மடியிலுமாக மாறி மாறி யிருந்து விளையாடி அவர்களது காதற் கடிதம்போல் வயங்கினன். அச்சமயத்திற் கீர்த்திதேவி தன் மணாளன் பணிப் பொருட்டு அவ்வறையிற் புக்கனள். ஆனால் விரதனும் பிரபையும் உள்ளிருந்தது அவளுக்குத் தெரியாது. கீர்த்தி பிரவேசித்ததும் பிரபைக்கு முந்தி விட்டது கோபம். அவள் சரேலென்று கட்டிலை விட்டிறங்கி வந்து கீர்த்தியைக் காலால் எட்டி யுதைத்து உருட்டினள். பிறகு அவள் உருண்டு கிடப்பவளை உற்று நோக்கி 'அடி! துஷ்டை! உனக்கு வெட்கமில்லையா? நாங்களிருப்பதை நீ யறிந்து இங்கு வந்தனாய். நீ பட்டத்தரசியா யிருந்தால் யாருக் கென்ன? நீபோ. மலடி. கணவன் குடும்பத்தை விருத்தி செய்யும் பாக்கிய மற்றவள் பதிப்பிரீதியுடையளாதல் எங்ஙனம்? வந்திக்கு யாண்டும் வந்தனையில்லை. நிந்தனையே புரியது. அவள் தன் கொழுநனது வமிசத்தை வழியடைக்கும் கல். ஆகலின் நீ எழுந்தோடி வெளியிற் போ. இனி இவ்விடத்துக்கு வந்தால் இன்னுங் கொடிய மானக்கேடு அடைவாய் என்று கண்டபடி திட்டித் தூற்றிவிட்டாள். பிரிய விரதன் பிரபையைத் தடை செய்யாமலும் கீர்த்தியைச் சமாதானப் படுத்தாமலும் கற்சிலைபோற் சும்மாவிருந்துவிட்டான். தையலார் மையலிற்பட்டோர் தம் பெருமையை யிழக்கவு மாட்டாரோ?

கீர்த்தி வெளியே தூர்த்தப்பட்டுத் தன்னிருக்கை சேர்ந்து அழுதாள், விழுந்தாள், அரற்றினள் பாவம். பிரபை கொடுத்த உதை அவளுடம்பை நோவுறுத்தியது. சரமாரியாப் பொழிந்த நிந்தைகள் சிந்தையைப் பிளந்தன. கணவன் காட்டிய வன்கண்மை அவளுயிரையே வதக்கி விட்டது. கண்ணாடி போன்ற கன்னத்திற் கண்ணீரை முத்து முத்தாயுதிர்த்துக் கொண்டு அப்பெண்பெரியாள் "பெண்ணென்றால் பேயுமிரங்குமென்பர், பிரபை எனக்கேன் இரங்கிலள்! நான் அவளுக்கு மறந்தும் கேடுசூழ்ந்திலேன். மன்னவர் அவள் மையலிற் சிக்கி என்னைப் புறக்கணித்திருப்பதும் என் பொல்லா வினையென்றே நான் அமைவேன். அவளை நான் மனத்திலும் கடிந்தது கிடையாது. மணாளர்க்குப் பணி புரியுஞ் சந்தர்ப்பமாயினும் அவ்வப்போது கிடைத்து வந்ததே பெரும் பாக்கியமாயிருந்தது. இனி அதுவும் போயிற்று. மன்னர் மன்னன் வயிற்றிற் பிறந்து மன்னர் மன்னர்க்கு மாலையிட்டும் பாவியேன் உதை வாங்கவும் நிந்தை கேட்கவுமே உயிர் வாழ்ந்தேன். கணவனருளில்லாத காரிகை உயிர் தரிக்கின் அவைகளே கண்ட பலன். நாளைப்பொழுதுவிடிவதற்குள் நான் நான்றுகொண்டேனும் வரையுருண்டேனும் விடமயின்றேனும் உயிர் நீத்து மானம் காப்பேன்" என்று தனக்குள் தீர்மானஞ் செய்து கொண்டாள்.

சிறிது பொழுதில், புலவரொருவர் அம்மங்கையினிருக்கைக்கு வந்தனர். அவள் அம்முனிவரது கருணைபொழி திருமுகத்தையும் திருநீற்று நுதலையும், கனிந்தவாய முகையும், பெருமைதரு துறவையும், பொறையுணர்ச்சியையும், பிஞ்ஞகனார் மலர்த்தாள்கள் பிரியாத மனத்தையும் தரிசித்த மாத்திரத்தில் தன் துயரமெல்லாம் மீண்டவள் போலானள். அப்பால் அவர்க்கடி பணிந்து அமுதளித்து அயற்புறத் தொதுங்கி நின்ற அவ்வம்மையை அந்தப்போதனர் கடைக்கணித்து "அம்மா! அடுத்தது காட்டும் பளிங்கு. அப்படியே உன்னெஞ்சம் கடுத்ததை உன் முகம் காட்டுகின்றது. நீ எல்லையற்ற துயரத்தில் ஈடுபட்டிருக்கின்றாய். உன் உயிரை நீ வெறுத்த சிற்பதையும் நாமறிவோம். நீ மயங்க வேண்டாம். உயிர்க்கு ஊறு கண் செய்து கொள்ளாதே. உனது துக்க நிவர்த்திக்கும் சுகப்ராப்திக்கும் உரிய நல்ல காலம் சமீபித்துவிட்டது. ஆனால் நீ அதுவரையும் செய்யவேண்டிய தொன்றுண்டு. அஃதுரைப்பேன் கேள். எல்லாக் கருமங்களும் விக்கினமுடையன. அதனை நீக்கியருள வல்லார் ஸ்ரீ விநாயகப் பெருமானொருவரே. ஆகையாற்றான் அப்பிரபுவுக்கு விக்னராஜா என்ற பெயருமுண்டு. தம்மை வழிபட்டார்க்கு விக்கினங்களைப் போக்கவும் வழிபடார்க்கு அவற்றை ஆக்கவும் அவரது அருளிப்பாடு. இன்னும் அவர் சர்வதேவர்களுக்கும் நாயகராகலின் விநாயக

தொடர்ச்சி 4 ம் பக்கம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் விஷு௵ வைகாசிமீ ௨0 ௳ திங்கட்கிழமை

சமய அறிவூட்டாக் கல்வி

விவசாயப்பகுதி மந்திரியாகிய மிஸ்ரர் D. S. சேனநாயக சென்ற சனிக்கிழமை (31-5-41) கொற்றுவிலுள்ள “கிறிஸ்தவ”க்கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்புக் கூட்டத்தில் தலைமை வகித்தபோது, இக்காலத்தில் இந்நாட்டு மக்களுக்கு அரசினரால் ஊட்டப்பட்டு வரும் கல்வியைப்பற்றிச் சொல்லுமிடத்துப் பின்வருமாறு சில பேசியுள்ளார்:—

“இங்குள்ள உயர்தரக் கல்வியை யூட்டுதற்காகிய கல்லூரிகளெல்லாம் பட்டினங்களிலேயே தாபித்து நடத்தப்படுகின்றன. இக் கல்லூரிகளுக்குக் கல்வி பயிலும்படி வரும் பிள்ளைகள் பெரும்பான்மையும் நாட்டுப்புறங்களிலிருந்து வந்து பட்டினங்களிலுள்ள இக்கல்லூரிகளிற் பயில்கின்றார்கள்; இக்கலாசாலைகளில் இக்காலத்தில் ஊட்டப்படுங் கல்வி இலௌகிகக் கல்வியேயாகும்: இந்த லௌகிகக் கல்விக்கும் பிள்ளைகள் இருந்து வரும் நாட்டுப்புறங்களில் அவர்கள் வாழும் வாழ்க்கைக்கும் சிறிதும் தொடர்பில்லையாகும். சிறுபிள்ளைகள் தங்கள் பிற்காலவாழ்க்கைக்காகிய குணம் ஒழுக்கம் சமயக்கொள்கை என்னுமிவைகளைப் பயின்று திரள்படச் செய்தற்காகிய காலம் அவர்கள் கல்வி பயிலுங் காலமேயாகும்; ஆனதால் கல்வி பயிலுங் காலத்தில் உலகக் கல்வியுடன் மார்க்கக் கல்வியும் ஊட்டப்படல்வேண்டும். இப்படியான சமய உணர்ச்சியில்லாமையினாலேயே இக்காலத்திற் பெரிய அநர்த்தங்களும் அழிவுகளும் நடக்கத் தலைப்பட்டுள்ளன; ஆனதால் இக்காலத்தில் ஊட்டப்படுங்கல்வி சரியான முறையில் ஊட்டப்படுகின்றதோ என்பதும் இக் கல்வியினால் மக்களுக்கு யாதும் நன்மையுண்டோ என்பதும் ஆசங்கைக்கு இடமாகும்.”

இக்காலத்தில் ஊட்டப்படுங் கல்விவிஷயமாக மிஸ்ரர் சேனநாயக கூறியவை அத்தனையும் நிசமாகும். பெரும்பான்மையான கலாசாலைகளிற் பேரளவிற் சமயக்கல்வி யென்று ஏதோ ஊட்டப்படுகின்றதேயன்றிப் பிள்ளைகட்கு ஆவசியகமான சமய உணர்ச்சிக்குரிய கல்வி யூட்டப்படக் காணேம். சமயக்கல்வி யூட்டப்புகும் உபாத்தியாயர்கள் அவதானிக்கவேண்டியவை பிரதானமாக இரண்டு உள்ளன. ஒன்று சமயநூலுணர்ச்சி நன்கு அறிந்தவரே சமயக் கல்வியூட்டுதற்காகிய ஆசிரியராக இருத்தல்வேண்டும். மற்றையது சமயக்கல்வி பயிற்றும் ஆசிரியர் தாமும் தெய்வபக்தியுடையவராய்ச்சமயாசார ஒழுங்கங்கள் பூண்டவராய் தொன்மை மறவாதவராய் இருத்தல் வேண்டும். இப்படியான ஒழுக்கங்களுடன் கூடிய உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்குஞ் சமயக் கல்வியே அதனைப் பயிலும் மாணுக்கருடைய மனத்திற் பசுமரத் தாணி போல் நன்கு பதியும். சமயநூலறிவு சமயாபிமானம் தெய்வக்கொள்கை முதலியன இல்லா ஒருவர் சமயக் கல்வியைப் பிள்ளைகட்கு ஊட்டமுயலுதல் பொதுமகளொருத்தி மகளிர் கற்பிலக்கணத்தைப் பிறமகளிர்க்குப் போதிக்க முயலல் போல அசம்பாவிதமாகும்.

மேலும் சமயக்கல்வி அந்தந்தச் சமயப் பிள்ளைகட்கு அவ்வச்சமய அபிமானிகளால் தாபித்து நடாத்தப்படும் கலாசாலைகளில் அந்த அந்த மார்க்கத்தை இறுகப்பற்றி யொழுகும் ஆசிரியர்கள்வாயிலாகவே ஊட்டப்படல் வேண்டும். இதனை விடுத்து “எம்மதமும் எமக்குச் சம்மதந்தான்” என்ற கொள்கைபூண்டு ஒழுகத் தொடங்கினால் அக்கொள்கையுடையவர் ஈற்றில் ஒருமதக்கொள்கையுமின்றி இடர்ப்படநேரும். ஒரு மதத்துப்பிள்ளை பிறிதொரு மதவாதிகளால் நடத்தப்படும் பள்ளிக்கூடத்திற் கல்விபயிலப் புகுந்தால் அந்தப் பிள்ளைக்குத் தன்மதத்தில் நம்பிக்கையீனமும் அந்நிய மதத்திற் சந்தேகமும் வந்து நேர, அப்பிள்ளை காலகதியில் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்றாய் ஒழுகும் நியதியுடையவனாகின்றான்; இது பெரியார் பலர் அனுபவத்திற் கண்டதாகும். இக்காலத்திலே சமயவிஷயமாக இன்னொரு இயல்புடையவர்களும் இருக்கக் காணப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் பிறப்பளவிலும் பேரளவிலும் ஒரு மார்க்கத்தைச் சேர்ந்தவர்களெனச் சொல்லிக்கொண்டு பேச்சிலும் செயலிலும் தாம் அநுசரிக்கும் மார்க்கத்திற்கு நேர்விரோதமாகப் பேசுகின்றார்கள்; அந்நிய மதத்தினரைக் காட்டிலும் இவ்விதமானகொள்கையுடையோர் அந்த மார்க்கத்திற்குப் பெரும் இடையூறு செய்வோராவர். இதற்குக் காரணம் இக்காலத்தில் ஊட்டப்படும் விபரீதக் கல்வியெனச் சொல்லுதல் தவறாகாது.

இரட்டைக்கொலையிற் புதிய உளவு

கொலைக்குப்பின் தற்கொலையா?

மீரிகாமம், மே 29

பன்னலையில் நடைபெற்ற இரட்டைக்கொலை சம்பந்தமாகச் சில புதிய உளவுகள் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது. மேற்படி சம்பவத்தின் விளைவாக இருவர் துப்பாக்கியாற் சுடப்பட்டு இறந்ததோடு மற்றுமொரு பெண் ஆபத்தான நிலைமையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அநுமதிக்கப்பட்டதாகவுஞ் சொல்லப்படுகிறது.

இது சம்பந்தமாகத் [illegible] நீதிபதி முன்னிலையிற் பின்வருமாறு சாட்சியங் கூறப்பட்டது.

மேற்படி சம்பவம் நடைபெற்ற தினம் காலை 7 மணியளவிற் பன்னலைத் தோட்டத்தைச் சேர்ந்த ராபேல் அப்புஹாமியும் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்டர் யங் என்பவருடைய வேலைக்காரச் சிறுவன் சாதா என்பவனும் சுப்பிரிண்டெண்டுடைய அறையில் வைக்கப்பட்டிருந்த தோட்டா அடைக்கப்பட்ட துப்பாக்கி சம்பந்தமாகச் சண்டை பிடித்தனர். மிஸ்ரர் யங் அவர்களை விலக்கிவிட்டு ஒரு சமரஸத்தைத் தற்காலிகமாக ஏற்படுத்தினார்.

அன்று சில நேரத்தின்பின், சாதா மேற்படி துப்பாக்கியையெடுத்துச் சென்று தோட்டத்தைச்சேர்ந்த பாதை ஓரத்தைச் செப்பனிட்டுக்கொண்டிருந்த ராபேலைச் சுட்டுக்கொன்றான். அதன்பின், காவற்குடிசைப்பக்கமாக அவன் ஓடி ராபேலுடைய மனைவி ஜூலியா பிரிட்டோவின் வயிற்றிலும் சுட்டான். பின்னர், அவன் பங்களாவுக்குத் திரும்பி ஓடித் தன்னைத்தானே சுட்டுக்கொண்டான்.

லண்டன் மெற்றிக்குலேஷன் பரீக்ஷை

பின்போடப்பட்டது

லண்டன் மெற்றிக்குலேஷன் பரீக்ஷை [illegible] இதுவரை வந்த [illegible] மாக ஜூன்மீ முதலாவது செவ்வாய்க்கிழமையில் ஆரம்பமாகும் மேற்படி பரீக்ஷை இவ்வருடம் பின்போடப்பட்டிருக்கிறது.

சங்கிலிப் பாலம் உடைந்தது

கண்டி, மே 28

ரோயல் பூந்தோட்டத்தையும் விவசாய இலாகாவின் ஆராய்ச்சி நிலையத்தையும் பிணைத்த சங்கிலிப் பாலம் ஒரு மரக்குற்றி புரண்டதன் பலனாகச் சேதமடைந்தது. சென்ற வாரம் மகாவெலி கங்கை பெருக்கெடுத்தபோது, மேற்படி பாலத்தின் ஒருபக்கத் தூணில் விழுந்ததன் பலனாக மேற்படி பாலம் நாசமடைந்தது.

சேதமேற்படக் கூடுமென்று எதிர்பார்த்தவுடன் போக்குவரத்தும் ஒழுங்கு செய்யப்பட்டுப்பாலத்தின் இரு அந்தங்களிலும் காவற்காரரும் நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர். கடைசியிற் போக்குவரத்துத் தடை செய்யப்பட்டவுடன் மேற்படி சம்பவம் நடைபெற்றது.

யாழ்ப்பாண விமானநிதி

பொருட்காட்சி களியாட்டவிழா

தேசாதிபதி திறந்து வைத்தபோது நிகழ்த்திய சொற்பொழிவு

“அடுத்த 6 மாசமும் அபாயகரமானவை”

யாழ்ப்பாணம் சனிக்கிழமை

இன்று மாலை 5 மணியளவில் ரோற்றரி கிளப்பாரால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ப்பாண விமானநிதியின் சார்பாக நடத்தப்படும் பொருட்காட்சியையும் களியாட்டத்தையும் தேசாதிபதி திறந்து வைத்தார்.

இன்று பிற்பகலிலேயே இரு ஆகாய விமானங்கள் யாழ்ப்பாண நகரத்தின்மீது பறந்து சென்றன. அவற்றில் ஒன்று குறித்த களியாட்டத்தை ஆதரிக்குமாறு சனங்களை வேண்டி மே. த. தேசாதிபதியின் படத்தோடு வெளியிடப்பட்ட துண்டுப் பத்திரங்களைப் போட்டுச் சென்றது.

தேசாதிபதியை வரவேற்றவர்களுள், யாழ்ப்பாணம் ஒரு விமானத்தை உதவ வேண்டுமென்று முதன்முதலே ஆரம்பித்தவராகிய அரசாங்கசபை அங்கத்தவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. A. மகாதேவா, மிஸ்டர் A. கார்டினர் திரு. S. நடேசன் ஆகியோருஞ் சிலராவர்.

ஷை பொருட்காட்சி களியாட்ட விழாவின் தலைவராகிய டிஸ்திறிக் நீதிபதி திரு. C. குமாரசுவாமி அவர்கள் தேசாதிபதியவர்களை வரவேற்றுப் பேசும்போது கூறியவை வருமாறு:—

“தீமையெல்லாங் கூடி நன்மையை நசிக்க முயலுவதாகிய இந்த யுத்தம் எவ்வளவு பாரதூரமானது என்பதை யாழ்ப்பாண மக்கள் உணருகின்றார்கள்.

டன்கேர்க் யுத்தத்தின்பின் “விமானம் வேண்டும்; விமானம் வேண்டும்” என்ற முறைவீட்டொலி எழுந்ததும், யாழ்ப்பாண மக்கள் தங்கள் சொந்த யுத்த உதவியாக ஒரு விமானத்தை உதவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

71,000 ரூ. சேர்ந்து விட்டது

அதற்காக இதுவரை 71,000 ரூபாவைச் சேர்த்து விட்டோம். அதை லக்ஷரூபாயாக்குவதற்கு அதனால் ஒரு விமானத்தை யனுப்புவதற்குத் தேவையான மிச்சப் பணத்தை எவ்வாறு பெறலாமெனச் சிந்தித்தோம்.

அச்சமயத்தில், ரோட்டரி கவர்னர் மிஸ்டர் கார்டினர் நாம் ஒரு பொருட்காட்சிக் களியாட்டத்தை ஒழுங்கு படுத்துவோம் என்று ஆலோசனை கூறினர். விமானநிதியில் மிக்க ஊக்கங் காட்டி வந்தவராகிய மாகாணத் தலைவர் மிஸ்டர் M. பிரசாத்தும் அந்த ஆலோசனையை அங்கீகரித்தார். அதன் பலனாகவே இந்தப் பொருட்காட்சி நடைபெறுகின்றது. தென்னிந்தியாவிலுள்ள வெள்ளப் பெருக்கின் விளைவாக மிஸ்டர். பிரசாத் இன்று இங்கு வந்து கொள்ள முடியவில்லை.

இந்தப் பொருட்காட்சியின் பிரதம நிர்வாக உத்தியோகஸ்தராகிய வணக். லோங் அவர்களின் சளையாத ஊக்கமும் முயற்சியும் போற்றத்தக்கன.”

தேசாதிபதி சொற்பொழிவு

பொருட்காட்சியைத் திறந்து வைக்கும்போது, மே. த. தேசாதிபதி கூறியவை வருமாறு:-

நான் அதிகம்பேச விரும்பவில்லை, ஏனெனில், இங்கு கூடியிருக்கும் நீங்களெல்லோரும் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்து அதை ஒழுங்கு செய்திருக்கிறவர்கள் என்னென்ன அதனைப் பொருட்களையெல்லாம் வைத்திருக்கின்றார்களென்பதைப் பார்க்க ஆவலுடையவர்களாயிருக்கிறீர்கள்.

எனினும் இந்தப் பொருட்காட்சியின் நோக்கத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகளை யான் கூறவிரும்புகின்றேன்.

இரண்டு மாசங்களுக்கு முன்னர், நுவரெலியாவில் ஒரு பொருட்காட்சியைத் திறந்து வைக்கும்போது, நாம் சனசமூகத்தின் சுதந்திரத்தைப் பாதுகாப்பவர் என்று குறிப்பிட்டேன். சுதந்திரப் பாதுகாப்புக்காக நடைபெறும் யுத்தம் அடுத்த ஆறு மாதங்களிலும் மிக அபாயகரமான நிலையை அடைகின்றது.

இந்த வேனிற் காலம் மிக்க அபாயகரமான யுத்தத்துக்கு இடமாயிற்று என்பதை நீங்கள் அறிவீர்கள். தீயசெய்திகளையும் நல்ல செய்திகளையும் நாம் மாறி மாறிக் கேட்கக் கூடியதாயிருந்தது. நோர்வே, பிரான்ஸ், கிறீஸ் முதலியஇடங்களிலிருந்து நம்மவர் வெளியேற வேண்டியவராயினர். இப்போது கிறீற்றிலிருந்தும் நம்மவர் வெளியேற வேண்டி ஏற்படும் போலத் தெரிகிறது. சென்ற 5 வருஷங்களாக எதிரிகள் தமது படைகளையும் யுத்தசாதனங்களையும் வேண்டியவற்றையும் ஆயத்தஞ் செய்திருந்தனர். பிரிட்டிஷார் அவ்வாறு செய்யத் தவறினர்.

பிரிட்டிஷாரின் விமானப்படை எதிரிகளின் விமானப்படைக்குச் சமமாகமாத்திரம் செய்யப்பட்டாற் போதாது. அதினும் இருமடங்காகவும் மும்மடங்காகவுஞ் செய்யப்படவேண்டும்.

இதைச் செய்வதற்காக யாழ்ப்பாணம் ஒரு விமானநிதியை ஆரம்பித்தது. திரு. பொன்னம்பலம் இதை ஆரம்பித்தார். இன்று இது பூர்த்தியாகப் போகின்றது.

நீடித்த யுத்தம்

“யாழ்ப்பாணம்” என்னும் பெயரோடு ஒரு விமானம் மிக விரைவில் ஆகாயத்திற் பறந்து எதிரியை எதிர்த்து யுத்தஞ் செய்யப் போகின்றது. யுத்தமோ நீடித்த தொன்றாக இருக்கப் போகின்றது. நீண்ட காலத்துக்கு நின்று யுத்தஞ்செய்து பரீக்ஷித்துப் பார்த்தன்றி யுத்தம் ஒரு முடிவுக்கு வரப்போவதில்லை. யாழ்ப்பாணம் அனுப்பும் இந்த விமானம் முதலாவது விமானமாக இருக்கட்டும்.

எனக்கு யாழ்ப்பாணத்தவரைத் தெரியும். அவர்களிற் சிலரோடு யான் 33 வருஷங்களாக வேலை செய்திருக்கிறேன். நான் இன்று ஏற்கும் இந்த யாழ்ப்பாணத்தைவிட இராச விசுவாசமுள்ள இடம் இந்த ஏகாதிபத்தியத்திலேயே இல்லை.

யாழ்ப்பாணத்தவர் இராசவிசுவாசமுடையவர்கள் மாத்திரமல்ல, அவர்கள் சளையாத முயற்சியும் உடையவர்கள். இந்த இயக்கம் வெற்றிபெற அவர்களால் இயன்ற உதவி புரிவார்கள் என்பது என் நம்பிக்கை.

என் சொந்தக் காணிக்கையாக நான் இந்த நிதிக்கென வணக். லோங் அவர்களிடம் ஒரு தொகையை அளித்துச் செல்லுகிறேன்.”

அதன்பின், தேசாதிபதி திரும்பி யாராவது இந்நிதிக்கு உதவுகிறவர்கள் இருந்தால் உதவுமாறு கேட்டுக்கொண்டார்.

பணம் உதவினோர்

உடனே, பட்டினசபை அங்கத்தவரும் மலாய்நாட்டில் தேசாதிபதியோடு நண்புடையவருமான திரு. வீரகத்திப்பிள்ளைசுப்பையா தேசாதிபதியுட்படப் பலர் சந்தோஷஞ் செய்ய முன்வந்து 500 ரூபாவை நிதிக்காக உதவினர்.

அதன்பின் அதிகார் நாகநாதர் அவர்கள் 1000 ரூபாவையும் டக்டர் S. சுப்பிரமணியம் 500 ரூபாவையும் உதவினார்கள்.

தேசாதிபதியவர்கள் இன்பத்திற்குரிய விளையாட்டுப் பகுதிகளையும் பொருள்களையும் ஏறக்குறைய ½ மணி நேரம்வரை சுற்றிப் பார்வையிட்டார்.

சிற்றுண்டிச் சாலையில் டக்டர் இராஜசிங்கத்தின் மனைவி ஸ்ரீமதி A. இராஜசிங்கம், தாம் 500 ரூபாவைக் குறித்த நிதிக்கு உதவுவதாகத் தேசாதிபதிக்குத் தெரிவித்தார்.

ஆகவே, மொத்தம் 2,500 ரூபா உதவப்பட்டது.

தேசாதிபதியவர்கள் உதவிய பணம் ரூ. 1000 என்று தெரிகிறது.

தேயிலை ஏற்றுமதிக் “கோட்டா”

100க்கு 5 வீத அதிகரிப்பு

சர்வதேசத் தேயிலைக் கட்டுப்பாடுக் கொமிற்றி நடப்புவருடத் தேயிலை ஏற்றுமதிக் “கோட்டா”வை 100க்கு 90 வீதத்திலிருந்து 92 வீதமாக உயர்த்தியிருக்கிறது. இவ்விஷயம் தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. சரவணமுத்துவால் சென்ற புதன்கிழமை அறிவிக்கப்பட்டது.

தேயிலை ஏற்றுமதிக் கோட்டா 100க்கு 5 வீதம் அதிகரித்ததால் இலங்கையிலிருந்து கூடுதலாக 125 லக்ஷம் ருத்தல் தேயிலை ஏற்றுமதி செய்யச் சாத்தியமாயிருக்கிறது.

இவ்வருடம் பெப்ரவரி மீ 26-ந் திகதி சர்வதேசத் தேயிலைக் கட்டுப்பாட்டுக் கொம்மிற்றி தேயிலைக் கோட்டாவை 1942-ம்ஆண்டு மார்ச் மீ 31-ந் திகதியோடு முடிவடையும், கட்டுப்பாடு வருடத்திற்கு 92½ வீதத்திலிருந்து 90 வீதமாகக் குறைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பாலபண்டித பண்டித வகுப்புகள்

சைவபரிபாலனசபை ஆதரவில் வருகிற ஜூன்மீ தொடக்கம் சனி ஞாயிற்றுக்கிழமைகளில் பால பண்டித பரீட்சைக்குரிய வகுப்பு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை நூல்நிலையத்தில் நடைபெறும் படியான ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. தக்க ஆசிரியர் கற்பிப்பர். அவ்வகுப்பிற் சேர்ந்து பயில விரும்புவோர் ஒரு தவணைக்கு (3-மீக்கு) உரிய வேதனமாக 9 ரூபா மேற்படி சபைத் தனாதிகாரியிடம் தவணை தொடக்கத்தில் கட்டிச் சேரற்பாலர்; ஜூன்மீ 7-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சைவபரிபாலனசபை நூல்நிலையத்தில பாலபண்டித வகுப்புத் தொடங்கும். பாடபுத்தகங்கள் முதலிய விவரம் அச்சமயம் அறிவிக்கப்படும். பயிலவிரும்புவோர் சபைக்காரியதரிசிக்கு விண்ணப்பித்துக்கொள்ளல் வேண்டும்.

பண்டிதவகுப்பிற் பயிலவிரும்புவோர் ஏறக்குறையப் பத்துப்பேரளவில் விண்ணப்பித்து முன்வரின அவ்வகுப்புந் தொடங்கும் விஷயம் ஆலோசித்து முடிவு செய்யப்பெறும்.

இங்ஙனம்,
மு. மயில்வாகனம்,
சைவபரிபாலனசபைக் காரியதரிசி.
யாழ்ப்பாணம்,
2-6-41. Mis 42 2-6-41

யாழ்ப்பாணம் முஸ்லிம் வாலிபர் சங்கம்

பெண்கள் சுதந்திரம்பற்றி வற்புறுத்தல்

ஷை சங்கத்தின் ஆதரவில் சென்ற வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் மஸ்றயுடீன் வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. பெருந்திரளான முஸ்லிம்களும் சிங்களரும் தமிழருஞ் சமூகமளித்திருந்தனர்.

ஜனுப்ஹாஜி V. எம். எம். என். அப்துல்காதர் தலைமை வகித்தார். பிரார்த்தனையோடு கூட்டம் ஆரம்பமாயிற்று. பிக்கு மகாநாம B. A. அவர்களும் அகில இலங்கைக் கிராமப் புனருத்தாரணச் சங்கத்தின் தலைவராகிய மிஸ்ரர் டாசெல் பீரிஸ் B. A. அவர்களும் சகோதரத்துவம், கிராமமுன்னேற்றம், ஒற்றுமை, சுயகைத்தொழில்களை வளர்த்தல், சாதிமத வேற்றுமை முதலியவற்றைப் பாராட்டாமற் சமூகஊழியஞ் செய்தல், பெண் கல்வி, பெண்கள் சுதந்திரம் முதலியவற்றை வற்புறுத்தி ஆங்கிலத்தில் இரு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இச்சொற்பொழிவுகளை இந்துசாதன உதவிப் பத்திராசிரியர் திரு. க. கி. நடராஜனவர்கள் தமிழில் அழகுற மொழிபெயர்த்துக் கூறினர். திரு. வை. பொன்னுத்துரை அவர்களாலும் A. S. இனயத்துல்லா அவர்களாலும் தமிழில் இரு சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. செல்வி H. G. சோமாவதியால் சிங்களத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அதுவும் தமிழில் மொழிபெயர்த்துக் கூறப்பட்டது.

ஈற்றில் மிஸ்ரர் M. A. றஹீம் நன்றியுரை கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

பம்பாயில் கலவரம் ஓயவில்லை

வண்டிக்காரர் குத்தப்பட்டார்

காரணமில்லாமல் கத்திக்குத்து

பம்பாய், மே 28

பம்பாய் நகரிற் கலகம் ஓய்ந்தபாடில்லை. 1931ம் வருஷம் இவ்வித கலகம் பம்பாயில்நடந்தபோது ஏற்பட்ட சமாதானக் கொமிற்றி மீண்டும் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கிறது. இக் கொமிற்றிக் கூட்டம் நேற்று மேயர் தலைமையில் நடந்தது. இக்கொமிற்றியை இன்னும் விரிவாக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. மேயர் இக் கூட்டத்திற் பேசும்போது இப்போது காரணமின்றியே கலகம் நடப்பதாகவும் கத்திக்குத்துப் பலவிடங்களில் ஏற்படுவதாகவும் மீண்டும் அமைதியை நிலைநிறுத்த இக் கொமிற்றி வேலைசெய்யுமென்றும் குறிப்பிட்டார்.

இருவர் கொல்லப்பட்டனர்

இன்று பம்பாய் நகரிற் கலவரக் காரணமாக இரண்டுபேர் இறந்தனர். 15 பேர் காயமடைந்தனர். 7 நாட்களாகவும் ஆங்காங்குக் கத்திக்குத்தும் மற்றச் சச்சரவுகளும் ஓயவில்லை. நேற்று மாலையிலிருந்து நடந்துவரும் சச்சரவுகளிற் பலர் குத்தப்பட்டார்கள். இன்று காலை ஒரு ஆலைத் தொழிலாளர் டிராம் வண்டியை விட்டிறங்கியதும் குத்தப்பட்டார். இவ்விதமே டிராம வண்டியிற் பிரயாணம்செய்த மற்று இருவர் குத்தப்பட்டனர். இன்னொருவரைக் கலகக்காரர்கள் கல்லால் அடித்துப் படுகாயப்படுத்திவிட்டு அவர் செத்து விட்டதாக நினைத்து அவ்விடத்திலிருந்து போய்விட்டனர். பிறகு பொலிஸார் அவ்விடத்துக்கு வந்து அவருக்கு உயிரிருப்பதாகத் தெரிந்து ஆஸ்பத்திரிக்குத் தூக்கி அனுப்பினார்கள்.

பகல் 1 மணிக்கு ஒரு மாட்டு வண்டிக்காரர் பின்னாலிருந்து குத்தப்பட்டார். இது சம்பந்தமாக அந்தப் பிரதேசத்தில் 49 பேர் கைது செய்யப்பட்டனர். இன்று ஒரு பீங்கான் கடையும் காகிதக் கடையும் கொள்ளையிடப்பட்டன.

1500 பேர் கைது

கலகம் ஆரம்பித்தது முதல் இதுவரை 29 பேர் மாண்டிருக்கின்றனர். 183 பேர் காயமடைந்தனர். கலக சம்பந்தமான பற்பல குற்றத்துக்காக இதுவரை 1500 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பம்பாயிற் கலக சம்பந்தமான குற்றங்களுக்குச் சவுக்கடித் தண்டனை விதிப்பதற்காகப் புதிதாக ஒரு சட்டம் பம்பாயிற் செய்யப்பட்டிருக்கிறது. பம்பாய் அரசாங்கம் நகரிலுள்ள சிலரை வெளியிடங்களுக்கு அனுப்பிவிட உத்தேசிப்பதாக வெளியான அறிக்கைக்கு ஆதாரமில்லையென அறிவிக்கப்படுகிறது.

ஸ்ரீ மஹாதேவதேசாய்

வார்தா மே 27

ஆமதாபாதிலிருந்து ஸ்ரீமான் மஹாதேவ தேசாய் திரும்பியதும் அவர் மகாத்மாவைக் கண்டு வகுப்புக் கலவர நிலைமை அவரிடம் எடுத்துச் சொன்னர்.

பிறகுஅவர் ஸ்ரீ தேவதாஸ்காந்தியுடன் பத்திரிகைக்காரர்கள் மகாநாட்டு நிர்வாக கொமிற்றிக் கூட்டத்துக்குச் சென்றார். ஆமதாபாத்தில் அமைதி நிலவ வழிதேட இந்து முஸ்லிம் பிரபலஸ்தர்கள் சேர்ந்து ஒரு விண்ணப்பமும் விடுத்திருக்கிறார்கள். வகுப்புக் கலவரத்தால் கஷ்டமடைந்தவர்களுக்கு டாக்காவில் உதவ மராட்டா ஆசிரியர் 1000 ரூபாய் அனுப்பியிருக்கிறார். கைது செய்யப்பட்ட 300 பேர்களில் 120 பேர் விடுதலை செய்யப்பட்டனர். மற்றவர்கள் விசாரணை [illegible] நடைபெறும்.

டாக்காவில் நேற்றிரவு ஒருவர் குத்தப்பட்டார். இது சம்பந்தமாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

டாக்காக் கலவரத்தைப் பற்றி விசாரிக்கநியமிக்கப்பட்ட கொமிற்றியினர் ஜூன் 2-ந் தேதி வேலையை ஆரம்பிப்பார்கள். இந்த விசாரணைக் கொமிற்றியுடன் மாகாண ஹிந்து சபைப் பிரதிநிதிகளும் காங்கிரஸ்பிரதிநிதிகளும் கலந்துகொள்ள முடிவு செய்திருக்கின்றனர்.

இலங்கை விமானப் படைப் பிரிவுகள்

சண்டை விமானங்களும் வெடிகுண்டு விமானங்களும்

திறமையாகக் கடமையாற்றுகின்றன

இலங்கை அரசாங்கம் அளித்த ரூபா 50 லக்ஷம் யுத்த நன்கொடையினால் இலங்கை என்ற பெயருள்ள வெடிகுண்டு விமானப் படைப் பிரிவு ஒன்றிற்கு விட்லி விமானங்களை வாங்கிக் கொடுப்பதற்கு உதவப்பட்டதாகவும் “இலங்கைப் பிரிவு இராவில் தாக்கும் விமானப்படையுடன் சேர்ந்து மிகவும் திறமையாகக் கடமை யாற்றுவதாகவும் குடியேற்றநாட்டு மந்திரியிடமிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

இலங்கைப் பொது மக்கள் அளித்த நன்கொடையினால் இலங்கை என்னும் இரண்டாவது சண்டை விமானப் பிரிவொன்றிற்கு “ஹரிக்கேன்” விமானங்கள் உதவப்பட்டிருக்கின்றனவாம். இரவில் சத்துருக்கள் தாக்குதலிலிருந்து பிரிட்டனைப் பாதுகாக்கும் கடமையை இரண்டாவது பிரிவு செய்து வருகிறதாம்.

மே 28ந்திகதி குடியேற்றநாட்டு மந்திரி அனுப்பியுள்ள தந்திச் செய்தியில் இவ்விபரங்கள் அடங்கியிருக்கின்றன.

தேர்தல்ஆக்ஷேபனை மனு விசாரணை

கொழும்பு நகரசபைக்கு மிஸ்டர் ஏ. ஈ. குணசேகரா தேர்ந்தெடுக்கப்பட்டதை ஆக்ஷேபித்துத் தொடரப்பட்ட மனு பொதுவாக வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதாகவும் பொதுவாக அனாவசியகமான செல்வாக்குப் பிரயோகிக்கப்பட்டதாகவும் கூறப்பட்ட முறைப்பாடுகளையொட்டி விசாரணை செய்யும்படி நீதிபதி மிஸ்டர் சூட்ஸ் உத்தரவிட்டார்.

தேகவியோகம்

இளையதம்பி— பொன்னம்மாள்

தபாற்கந்தோர்ப் பகுதியிற் கிளார்க்காகக் கடமை பார்த்து வந்தவரும் வண்-ஐயனர்கோவிலடியில் வசித்தவருமாகிய காலஞ்சென்ற சுப்பிரமணியர் இளையதம்பியவர்களின் மனைவியும், ஐயனர் கோவிலடி திருவாளர்கள் டக்டர் சி. துரையப்பா சபாரத்தினம், ஐயம்பிள்ளை உடையார், மாணிக்கவாசகர் என்னும் சகோதரர்கட்குச் சகோதரிமுறை பூண்டவருமாகிய ஸ்ரீமதி. பொன்னம்மாள் தமது 48 ம் வயதில் தம்மைச் சிலநாட்களாகப் பிடித்துவருத்திய நோய்காரணமாக சென்ற மே மாதம் 24ந் திகதி சனிக்கிழமை இரவு ஐயனர் கோவிலடியிலுள்ள தமது இல்லத்தில் சுற்றமித்திரர் அயலார் எல்லாரும் வருந்தத் தேகவியோகமாயினர். ஈமக்கடன் அடுத்தநாள் கோம்பையன் மணல் மயானத்திற் பலர் சமூகத்திற் சிறப்பாக விதிப்படி நடைபெற்றன. இப்பெண் தெய்வபக்தி ஒழுக்கம் விருந்தோம்பல் ஆலயவழிபாடு முதலாம் சுகுணங்களோடும் சற்குணங்களோடும் வாழ்ந்து வந்த உத்தமியாவர். இவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

அமெரிக்க தூதர்

லண்டனிலிருந்து யுனைடெட்ஸ்டேட்ஸ் வருவார்

வாஷிங்டன் மே 26

லண்டனிலுள்ள அமெரிக்க தூதரான மிஸ்டர் வினன்ட் இந்த வாரத்திறுதியில் அறிக்கை செய்வதற்காக யுனைடெட்ஸ்டேட்ஸ் வரும் பொருட்டு லண்டனைவிட்டுப் புறப்படுவதாக அமெரிக்க அந்நிய இலாகா அறிவித்திருக்கிறது.

சிகரட் புகையிலை உற்பத்தி

இலங்கையில் இப்பொழுது சிகரட்டின் உபயோகம் வெகுவாக அதிகப்பட்டிருக்கிறது. இன்னும் வரவர அதிகப்பட்டுக் கொண்டிருக்குமென்று தான் எண்ண வேண்டுவதாகவு மிருக்கின்றது. முற்காலங்களில் சிகரட் பிடிப்பவர்களின் தொகை மிக மிகச் சுருக்கமாக விருந்தது. ஒரு சிலரே அதைப் பாவித்து வந்தார்கள். பெரும்பாலோர் யாழ்ப்பாணச் சுருட்டுக்களை உபயோகித்து வந்தனர். ஆனால், இப்பொழுதோ நிலைமை நேர் தலைகீழாக மாறியிருக்கின்றது. சுருட்டுப் பிடிப்பவர்களின் தொகை குறைந்து சிகரட் பிடிப்பவர்களின் தொகை அதிகப்பட்டிருக்கின்றது. இதன் பயனாக இன்னும் சிறிது காலத்தில் யாழ்ப்பாணம் சுருட்டுத்தொழிலே நசித்து விடுமோவென்று பெரிதும் அஞ்சப்படுகின்றது. நவநாகரிக முதிர்ச்சியாலோ அல்லது வேறெக்காரணத்தாலோ, சரியாகவோ அன்றித் தவறாகவோ சிகரட்பழக்கம் அளவு கடந்த நிலைமைக்கு அதிகப்பட்டு விட்டது. பள்ளிச் சிறுவர் முதல் பெண்கள் ஈறாகச் சிகரட் புகைப்பதைப் பார்க்கின்றோம். இதன் பயனாக, இவ்விலங்கையிலேயே இரு சிகரட்தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் நாளொன்றுக்கு லட்சக்கணக்கான சிகரட்டுகள் உற்பத்தி செய்யப்படுகின்றனவென்பதிற் சந்தேகமில்லை. அவைமுழுதும் இவ்விலங்கையிலேயே செலவாகின்றன. போதாக் குறைக்கு வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான சிகரட்டுகள் வரவழைக்கப்படுவதைக் காண்கிறோம். இவ்விலங்கையிலுள்ள தொழிற்சாலைக்காரர்கள் சிகரட் தயாரிப்பதற்கு வேண்டிய புகையிலையை அமெரிக்கா, இந்தியா முதலிய இடங்களிலிருந்தே வரவழைக்கின்றனர். இதன் மூலம் இலங்கையிலிருந்து ஒவ்வொரு வருஷமும் லட்சக்கணக்கான பணம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. இப்புகையிலை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுமானால், இவ்வினத்தின் மூலமாக நம் பணம் வெளியேறாமலிருப்பதுடன் இலங்கை விவசாயிகளின் நிலைமையும் மேம்படும். இவ்விஷயத்தில் இதுவரை போதிய அளவு கவனம் செலுத்தப்படாதது பெரிதும் வருந்தத் தக்கதாம்.

இலங்கை யரசாங்கத்தார் இப்பொழுது சிகரட் புகையிலை உற்பத்தி விஷயத்தில் அதிக கவனம் செலுத்த முற்பட்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும். ஏற்கெனவே வாரியாப்பொலை கலவக்கத முதலிய இடங்களிற் பரீட்சார்த்தப் புகையிலைப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டுச் சிகரட் புகையிலை உற்பத்தி வேலை நடக்கிறது. அதைப் போலவே வடமாகாணத்தைச் சேர்ந்த கிளாலி என்னுமிடத்தில் பத்து ஏக்கர் நிலத்தில் சிகரட் புகையிலை சாகுபடி செய்வதற்கு இருபது விவசாயிகளுக்கு எல்லாவிதமான உதவிகளையும் செய்வதற்கு அரசினர் திட்டம் வகுத்திருக்கிறார்கள். இத்திட்டப்படி விவசாயிகளுக்குச் செயற்கை உரம் வழங்கப்படும். பாடம் செய்யப்படாத பச்சைப் புகையிலை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கிக் கொள்ளப்படும். பக்குவம் செய்து விற்கப்பட்ட பின் கிடைக்கும் லாபத்தில் உரத்திற்கான கிரயம் கழித்துக் கொள்ளப்பட்டபின் மிகுதி லாபம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இவ்வாறு கிடைக்கும் லாபம் குறைவாயிருக்குமானால் உரத்தின் கிரயம் கழித்துக் கொள்ளப்படமாட்டாது. இப் பரீட்சார்த்தமுறை வெற்றியளிக்குமென்று நம்புவோமாக! இலங்கையின் வடபகுதிப் புகையிலை உற்பத்திக்குப் புகழ்வாய்ந்தது. அங்குள்ள விவசாயிகள் புகையிலைச் சாகுபடி செய்வதிலும் அதனைப் பாடம் செய்வதிலும் அதிக திறமை வாய்ந்தவர்கள். யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து திருவாங்கூர் முதலியவிடங்களுக்கு ஏராளமான புகையிலை வருஷந்தோறும் போய்க் கொண்டிருந்தது. அதுவும் இறக்குமதித் தீர்வை காரணமாகவும் பிற காரணங்களாலும் வரவரக் குறைந்துகொண்டு வருகிறது. சுருட்டுத் தொழிலும் க்ஷீணித்து வருகிறது. ஆகவே வடபகுதியிலுள்ள புகையிலை உற்பத்தியாளர்கள் தற்போதைய நிலைமைக்குத் தக்கவாறு தங்களது போக்கையும் மாற்றிக் கொண்டு சுருட்டுக்குப் பயன்படும் புகையிலையையும் திருவாங்கூருக்கு அனுப்பும் புகையிலையையும் உற்பத்தி செய்வதற்குப் பதிலாகச் சிகரட் புகையிலை உற்பத்தியில் தங்களது முழுக் கவனத்தையும் செலுத்திப் பாடுபட்டுப் பயனடைய முன்வர வேண்டுவது அவசியமாகும். அரசினரும் அவ்வாறு முன் வருபவர்களுக்குப் பல வகைகளிலும் உதவி செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

—தினகரன்.

"இந்தியாவில் இந்தியர்களால் இந்திய அரசாங்கம்"

இந்தியா உதவிமந்திரியின் பிரசங்கம்

"பிருத்தானிய அரசாங்கத்தின் உத்தேசம்"

லண்டன், மே 29

லீட்ஸ் சர்வகலாசாலையின் சான்ஸலரும் இந்திய உதவிமந்திரியுமான டெவன்ஷயர் கோமகன் இன்று அரசாங்கத்தின் பூரண அதிகாரத்துடன் மேற்படி சர்வகலாசாலையில் சொற்பொழிவாற்றுகையில் இந்திய அரசாங்கத்தைப் பிருத்தானிய அரசாங்க காரியாலயத்திலிருந்து நிர்வகிக்காமல், இந்தியரால் இந்தியாவுக்காக இந்தியாவில் நிர்வகிக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது.-

இந்தியாவின் நெருங்கிய ஒத்துழைப்பைப் பெறுவதற்கான முயற்சி கைவிடப்படமாட்டாது. அரசியற் பிளவுகளிருந்தபோதிலும் இந்திய சாம்ராஜ்ஜியம் பிரிட்டனின் யுத்த முயற்சிக்குப் பூரண ஒத்தாசை செய்கிறது.

அபிஸீனியாவில் இந்தியத் துருப்புகள் மகத்தான வேலை செய்திருக்கின்றனர். ஈராக் நிலைமை அதிக கவலைக்கிடமாயில்லாதிருப்பதற்கு இந்தியத் துருப்புகளுக்கு நன்றி தெரிவிக்கவேண்டும்.

யுத்தம்பற்றிப் பொதுவாகப் பேசும்போது, நமது சத்துருவின் பலத்தைக் குறைத்துக் கணிப்பது மிலேச்சத்தனமாகுமென்று கோமகன் கூறினார். ஜெர்மனி யுத்த வெறி பிடித்த ஒரு மிருகம் என்று அவர் குறிப்பிட்டார்.

இருந்தபோதிலும் யுத்தஞ்செய்ய முன்வரும் இளம் விமானிகள் சுதந்திர மனிதர்களாகப் பயிற்சி பெற்றுச் சிறந்த முறையிற் படைக்கோலம்பூண்டு அவர்களின் சத்துருக்களிடம் சிறந்த வீரர்களாவார்களென்று தாம் நிச்சயமாக நம்புவதாயும் அவர் கூறினார்.

மகாதிபத்திய விமானப்பயிற்சித் திட்டம் என்றும் எதிர்பாராத விதத்தில் இப்பொழுது பிரமாண்டமான முறையில் நடைபெறுகின்றதென்று கோமகன் தெரிவித்தார்.

12000 ரூபா பெறுமதியான அபின் பிடிபட்டது

பெண்ணுக்கு 500 ரூபா அபராதம்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பொலிகண்டியில் வசிக்கும் பொன்னையா-கணபதி என்பவரின் மனைவி சின்னம்மா என்னும் பெண் தன் வீட்டில் 12000 ரூபா பெறுமதியான அபினை மறைத்துவைத்திருந்தபோது மதுப்பரிசோதகர்கள் அந்த வீட்டுட் புகுந்து சோதனை செய்தபோது மேற்படி ரூபா தொகை கொண்ட அபினைக் கண்டெடுத்தனராம். பருத்தித்துறை நீதிஸ்தலத்தில் விசாரணையின்பின் அப்பெண்ணுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டதாம்.

பெற்றோர் மகாநாடு

கோயிலாக்கண்டி ஸ்ரீமகாலக்ஷுமி சைவ வித்தியாசாலை

நிகழும் விஷு வருஷம் வைகாசி மாதம் 10ந் திகதி (23-5-41) வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் கீழுள்ள கோயிலாக்கண்டி ஸ்ரீ மகாலக்ஷுமி சைவ வித்தியாசாலை மண்டபத்தில் தென்மராட்சி மணியகாரன் திருவாளர் C. நாகநாதர் அவர்களின் தலைமையில் மேற்குறித்த மகாநாடு தேவாரபாராயணத்துடன் தொடங்கப்பெற்றது. அத்தருணம் அவையோரின் மிகுந்த கரகோஷத்துடன் தலைமை ஆசிரியரவர்களால் மணியகாரனவர்கட்கும் சுகாதார வைத்தியர் அவர்கட்கும் பூமாலைகள் சூட்டப்பெற்றன.

பின்பு, மாணவரால் வந்தனோபசாரப் பாடப்பெற்றதும் தலைவர் எழுந்து பாடசாலை மண்டபமே நிரம்பி வெளியிலும் அநேகர் நிற்கும்படி சேர்ந்ததைக் கண்டு பாடசாலையிற் பெற்றோர் கொண்டிருக்கும் அபிமானத்தையும் தலைமையாசிரியரின் ஊக்கத்தையும் அவரிடத்திற் பெற்றோர் கொண்டிருக்கும் நல்லெண்ணத்தையும் பற்றிப் பெரிதும் வியந்து பாராட்டினர். அப்பால், கிராம முன்னேற்றத்துக்கு இன்றியமையாத கைத்தொழில் கிருஷிகத்தொழில் ஆதிவிருத்தி என்னும் விஷயங்களைப்பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு சபையோரின் உள்ளத்தில் நன்கு பதியும்படி நிகழ்த்தினர்.

அதன்பின், அப்பகுதிச் சுகாதார வைத்தியர் (F. M. O) திரு. N. சபாரத்தினம் அவர்களால் சுகாதார சம்பந்தமான ஓர் சிறந்த சொற்பொழிவு எவர் மனத்தையும் கொள்ளை கொள்ளும் வண்ணம் நிகழ்த்தப்பெற்றது. பின்னர்ப் பிரசவ சம்பந்தமான மாயாதீபப் படம் காட்டப்பெற்றது. அப்போது பெண்கள் தினசரி வாழ்க்கையிற் கைக்கொள்ள வேண்டிய முறைகளை நன்கு விளக்கிக் காட்டினர். இடையில் நிகழ்ந்த மாணவரின் சங்கீத விருந்தும் தலைவரின் குறிப்புரைகளும் அவையோரை மேன்மேலும் மகிழ்வுறச் செய்தன.

ஈற்றில் தலைமையாசிரியர் நன்றி கூறுமுகத்தான், பேச்சாளர் கூறிய விஷயங்களையும் படமூலம் விளக்கிய விஷயங்களையும் பெற்றோர்கள் அனுசாரணைக்குக் கொண்டுவர ஆயத்தமாயிருக்கிறார்கள் என்பதை உடனே வெளிக்காட்டிய தன்மையை மெச்சி அவர்களின் பெருமையையும் விசேஷ குணஞ் செயல்களையும் இப்பாடசாலை விளம்பரப்படுத்துகிறதென்று எடுத்துக்காட்டியபின் மகாநாடு தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவெய்தியது.

—கடித.

பம்பாய்க் கலவரம்

ஊர்வலத்தின் மீது கல்லெறி

26 பேருக்கு மரணம்;
168 பேருக்குக் காயம்

பம்பாய் மே 27

இன்று பம்பாய்க் கலவரத்தில் இருவர் இறந்தனர்; 12 பேர் காயமடைந்தனர். காலையில் நிலைமை சற்று அமைதியாக விருந்ததாயினும் இருட்டியதும் பலவிடங்களில சச்சரவு ஏற்பட்டு ஆறுபேருக்குமேல் குத்தப்பட்டனர். ஒருவர் அங்கேயே இறந்தார். நேற்றுக் காயமடைந்தவர்களில் இன்னொருவர் இன்று ஆஸ்பத்திரியில் இறந்தார். ஆக இதுவரை கலகத்தால் மாண்டவர்கள் தொகை 26. காயமடைந்தவர்கள் தொகை 168. ஒரு காசி கட்டிடத்துக்கு இன்று தீ வைக்கப்பட்டது. ஆனால் அது உடனே அணைக்கப்பட்டது.

கல்லெறி

ஒரு பிரதேச ஊர்வலத்தினமீது கல்லெறியப்பட்டது. பொலிசார் உடனே அது சம்பந்தமாக ஐந்து பேரைக் கைதுசெய்தனர். துருப்புகளும் ராணுவப் பொலிசாரும் கலகப் பிரதேசத்தில் காவல் புரிந்து வருகின்றனர். பம்பாய் நகர வியாபாரிகள் ஒன்றுகூடி பம்பாய் நகரிலுள்ள இருவகுப்புப் பிரபலஸ்தர்கள் அடங்கிய ஒரு சமாதானக் கமிட்டியை நியமித்திருக்கின்றனர். இன்றுமாலை அக்கமிட்டியினர் ஒன்றுகூடிக் கலவரத்தைத் தவிர்க்கும் வழியைப் பற்றிச் சிந்தித்தனர்.

இந்திரன்

(Uranus)

(மட்டுவில் திரு. சி. சுப்பிரமணியப்புலவர் அவர்கள் எழுதுவது) "இல்லைவாசம்"

ஹேர்ஷல் என்பவர் கீர்த்தி வாய்ந்த வானநூல் வல்லுனராய் வருவதற்கு முன் இளம்பிராயத்தில் ஹனோவேரிய ராணுவத்தில் (Hanovarian Army) மெய்க்காப்பாளராகச் சேவை செய்தார். ஒருநாள் இவர் தனது சகாக்களுடன் யுத்த முனையில் நின்று போர் புரிந்த பின்னர் ஓர் ஆழ்ந்த ஈரலிப்புடைய அகழியில் நித்திரை செய்ய நேரிட்டது. குளிராலும் பனியாலும் நித்திரையில்லாததால் அவ்வுத்தியோகத்தில் சேவை செய்ய வெறுப்புற்று விலகினர். இதன் பின்னர் சங்கீதம் கற்க ஆரம்பித்தார். இவரது சங்கீதத் திறமையை யறிந்து பாத் (Bath) நகரிலுள்ளவர்கள் அங்குள்ள எண்கோண மண்டப தேவாலயத்தில் வீணைவாசிக்க நியமித்தனர். இக்கலையுடன் நில்லாது பின்னர்க் கணிதமும் நயன சாஸ்திரமும் கற்கத்தொடங்கினர். கணித சாஸ்திரத்தில் ஆர்வமதிகரிக்க வானசாஸ்திரமுங் கற்கலாயினர். ஆலயத்திலிருந்து வீடு வந்ததும் கழுத்துக் கட்டையை அவிழ்ப்பதற்கு முன்னதாகவே வான சாஸ்திரங் கற்பதற்கு இன்றியமையாததாகிய தூரதர்சனிகளை இயற்றுவதில் முனைவாராயினர். இவருடைய வீட்டின் கூடம் சிற்பசாலையாகவும், பள்ளியறை கடைசல் வேலை செய்யுமிடமாகவும் காணப்பட்டன. தனது வளவின் பிற்பக்கத்தில் ஓர் சிறிய வேதசாலையை இயற்றித் தினமும் நித்திரையின்றி வானஜோதிகளைப் பரிசோதிப்பதிலே தனது காலத்தைச் செலவு செய்வாராயினர். இதன் பின்னர்ச் சங்கீதக்கலையை உபதொழிலாகவே நடாத்தி வந்தார்.

வழமைபோல் வானஜோதிகளை ஆராயும்பொழுது 1781 ம் வருடம் மார்ச் மீ 13 உ 10 மணிவரையில் ஓர் புதிய நட்சத்திரத்தைக் கண்டார். அதுவீது மற்றைய நட்சத்திரங்களிலும் பார்க்க நிறத்திலும் அளவிலும் வித்தியாசமாயிருந்தலைக் கண்டபொழுது இதைத் தினமும் மிக்க கவனமாக ஆராயத் தொடங்கினர். ஆனால் இது சிறிது சிறிதாக நாளுக்கு நாள் நகர்வதை அவதானித்த பொழுது அது நட்சத்திரமல்லவென்றும் சூரியனைச் சுற்றும் ஓர் கிரகமென்றும் துணிந்து தான் புதிதாகக் கண்ட கிரகத்தைப்பற்றி ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஆராய்ச்சியாளர்க்குத் தெரிவித்தார், வானநூல் வல்லுனர் இதை மிக்க அவாவுடன் ஆராய்ச்சி செய்யவும், கணிதவிற்பன்னர்கள் இதனுடைய கோளப்பாதையைக்கணிசரிதியாகவும் ஆராயத் தொடங்கினர். கணித வல்லுனர்களாகிய லாப்லாஸ் (Laplass) லெக்ஸில் (Lexell) என்பவர்கள் இது செல்லும் பாதையானது வால்வெள்ளிகள் செல்லும் பாதைபோலிருக்க வில்லையென்பதை யறிந்த பின்னர் இது ஓர் புதிய கிரகமெனத் தீர்மானித்தார்கள். 1690ல் விலாம்ஸ்டெட் (Flamsted) என்பவராலும் வெளியிடப்பட்ட நட்சத்திரப் பட்டியில் (Star Cat-logue) இப்போது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட கிரகம் முன்னமே அதிற் குறிக்கப் பட்டிருப்பதாயும் அவதானித்தார்கள். விஞ்ஞான உலகம் இவரது திறமையைப் பாராட்டியது.

ஹேர்சில் என்பவரை மூன்றும் ஜோர்ஜ் (King George III) வேந்தர் அழைத்து அவருடைய விடாமுயற்சியையும் ஆராய்ச்சித் திறமையையும் பாராட்டி வின்ட்ஸரிலுள்ள வேதசாலையில் (Windsor Observat-ory) ஆராய்ச்சியை நடத்துமாறு கற்பித்தார். இக்கிரகமானது இதற்கு முன்னரும் பதினேழு முறை வேறு வேறு வானநூல் வல்லுனர்களால் பல பல காலங்களில் கவனிக்கப்பட்டிருந்தாலும் ஆராய்ச்சி நுட்பமும் பொறுமையுமில்லாத காரணமே இவர்களின் திறமை வெளிவராததற்குக் காரணமாகும். போட் (Bode) என்பவர் இப்புதிய கிரகத்துக்கு யூரானஸ் (Uranu) என்னும் பெயரே இடப்படவேண்டுமெனக் கூறினர். பௌராணிக மதப்படி யூரானஸ் (இந்திரன்) சனியுடைய பிதாவென்றும், சனி வியாழனுடைய பிதாவென்றும் கொள்ளப்படுவதால் யூரனஸ் என்னும் பெயரானது மிகமகிழ்ச்சியுடன் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு இடப்பட்டது.

இதற்கும் சூரியனுக்கு மிடையிலுள்ள சராசரி தூரம் 1782800000 மைல். இதன் விட்டம் 31000 மைல். இது சூரியனை ஒருமுறைசுற்ற 84 வருடங்கள் செல்லுகின்றன. இதனுடைய நெருக்கம் பூமியிலும் நாலிலொருபங்காகும். இதுசனியைப்போல் அடர்த்த பவனத்தால் சூழப்பெற்றிருக்கிறது. இதன்பரிவிருத்திக் காலமாகிய 370 நாட்களுக்கொருமுறை பிரதியோகமாக வரும்போது ஆறாம் ஒளிவகுப்பைச் சேர்ந்த நட்சத்திரத்தைப்போல் பிரகாசிக்கிறது. அப்போது இதன்மேற்பரப்பானது நீலம் பச்சைநிறமாகத் தோன்றும். இதன்சீதோஷ்ணநிலையானது 200 C(360 F)பாகை யாகும்.

இந்திரனுக்கு நான்குடபக்கிரகங்களிருக்கின்றன. அவைகளுள் Titania ஒபேன் Oberon என்னும் இருதுணைக்கோள்களும் 1787 ல் ஹேர்சில் என்பவராலும் ஏரியல் Ariel அம்பிரியல் Umbriel என்னும் மற்றைய இருகோள்கள் 1851 ல் லஸல் Lassel என்பவராலும் கண்டுபிடிக்கப்பட்டன. இத்துணைக்கோள்கள் செல்லும் வீதியானது கிராந்தி விருத்தத்துக்கு 82 பாகைசரிந்திருக்கின்றது.

துணைக்கோள்களின் பெயர்.	கண்டுபிடித்தவர் பெயரும் காலமும்.	சராசரி தூரம்.	சுற்றோட்டகாலம்.		
			நாள்.	மணி.	மினி.
1. ஏரியல்	லஸல் 1851	118300	2	12	29
2. அம்பிரியல்	,, ,,	116500	4	3	28
3. டிற்றனியா	ஹேர்சல் 1787	270600	8	16	56
4. ஒபேன்	,, ,,	361900	13	11	7

யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிற்றெட்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம்-மலையாளம் புகையிலைக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிற்றெட்டின் மனேஜர் பதவிக்கு மனுக்கள் அழைக்கப்படுகின்றன.

மனுச் செய்து கொள்வோர் ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறப்பாகக் கணக்குப்பார்ப்பதிலும் நல்ல அறிவுள்ளவர்களா யிருத்தல் வேண்டும்.

சம்பளம்:- மாசமொன்றுக்கு ரூபா 100 உம், வீட்டு வாடகையாக மாசமொன்றுக்கு ரூபா 25 உம் கொடுக்கப்படும். எதிர் காலத்தில் சம்பள உயர்வு கிடைத்தல் கூடும்.

வயது:- மனுச்செய்து கொள்வோர் 30 வயசுக்கு மேற்பட்டவர்களாயும் 45 வயசுக்கு உட்பட்டவர்களாயும் இருத்தல் வேண்டும்.

சிக்கூரிற்றி:- தெரிவு செய்யப்பட்டோர் ரொக்கமாக 2,000 ரூபாவும், கடன் சுமத்தப்படாத அசைவற்ற ஆதனமாக 3,000 ரூபாவும் சிக்கூரிற்றி கொடுக்கக் கூடியவர்களா யிருத்தல் வேண்டும்.

மனுப்பத்திரங்கள் ஆங்கிலத்தில் எழுதப் பெற்றனவாய், பிறந்த திகதி தராதரம், ஏதாவது வர்த்தக அநுபவம், சமீபத்தில் பெறப்பட்ட நற்சாக்ஷிப் பத்திரங்கள் முதலியவற்றோடு 1941.ம் ஆ ஜூன் மீ 15.ந் திகதிக்கு முன், கீழ்க் காணும் விலாசத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

அபேட்சகர்கள் எவ்விதமாகவேனும் எவரையேனும் கண்டு தமக்காக வேலை செய்யும்படி வேண்டிக் கொள்ளுதல் அவர் தகுதியற்றவர் என்று கொள்ளுதற்கு இடமளிக்கும்.

கௌரவகாரியதரிசி,
யாழ்ப்பாணம் - மலையாளப்புகையிலைக் கூட்டுறவு விற்பனைச்சங்கம் லிமிற்றெட்
3.ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்,
29—5—41

Mis 40 2 & 5.6.41

பழைய கெய்ஸர் பிழைப்பது சந்தேகமா?

கடுமையானநோயினால் அவதி

நியூயோர்க் மே 30

கடுமையான ஜலதோஷத்தினாலும் குடல் நோயினாலும் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பழைய கெய்ஸர் இனிக் குணமடைவாரா என்பதைப்பற்றி அவருடன் நெருங்கிப் பழகுகிறவர்களுக்குச் சந்தேகமேற்பட்டிருக்கின்றதென "நியூயோர்க் டைம்ஸ்" பத்திரிகைக்கு பேர்லினிலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. 82 வயதான பழைய கெய்ஸர் ஜுரத்தினால் மிகவும் ஆரோக்கியம் குன்றி அவதிப்படுகிறார்.

மலையாளத்தில் வெள்ளம்

சென்னை மே 30

பெருமழை காரணமாக மலையாளத்தில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. உடைப்பு விழுந்த பகுதிகளில் வெள்ள மட்டம் வடிந்து விட்டதாகக் கடைசியாக வந்த செய்தி கூறுகிறது. மேற்கொண்டு மழை இல்லாவிட்டால் இன்று வெள்ளம் பூரணமாக வடிந்து விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. செவ்வாய்க்கிழமை வெள்ளத்தால் இருவர் அடித்துக்கொண்டு போகப்பட்டதாகக் கூறப்படுகிறது. கொச்சி சமஸ்தானத்தில் திரிச்சூருக்கு அப்பால் புகைரதப் போக்குவரத்துகள் அனைத்தும் ஸ்தம்பித்து விட்டன.

தந்திச் சமாசாரம்

30-5-41

நிகழும் யுத்தம் ஆரம்பித்தபின் சென்றவாரம் பிருத்தானிய கடற்படைக்கும் ஜர்மனிய கடற்படைக்குமிடையே நடந்த யுத்தமே மிகவும் கோரமானதெனச் சொல்லப்படுகின்றது. பிருத்தானிய பெரிய யுத்தக்கப்பல்களோடு எட்டு ஒன்பது தோப்பிடோ வள்ளங்களுஞ் சேர்ந்தே அந்தப் பெரிய ஜர்மனிய கப்பலை உடைத்துக் கடலுள் அமிழ்த்தியதெனச் சொல்லப்படுகின்றது. பிஸ்மார்க் கப்பல் கடலில் மூழ்கிய போது தப்பிய ஜர்மனியருள் 100 பேர்வரையிற் பிருத்தானியரால் மீட்டுச் சிறையிடப்பட்டனராம்.

H. M. S. கூட் என்னுங் கப்பலில் தப்பினோர் மூவர்

பிருத்தானியருடைய பாரிய யுத்தக் கப்பலாகிய கூட் உடைந்து கடலுள் மூழ்கியபோது 3 பேர் மாத்திரம் உயிர் பிழைத்தார்களாம்.

H. M. S. யோர்க்கென்னும் பிருத்தானிய கப்பல்மீது பகைவர் இடைவிடாது வெடிகுண்டு பெய்ததினால் அது சேதமுற்றதாம். மாஷோனு என்னும் பிருத்தானிய டிஸ்றோயர்க் கப்பல் பிஸ்மார்க்கைத் தாக்கும்போது பகைவர் பிரயோகித்த குண்டுகள் காரணமாக உடைந்து கடலுள் மூழ்கிவிட்டதாம், அதிலுள்ளோரில் 46 பேரைக் காணவில்லையெனப் பிருத்தானிய கடற்படை யதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பத்தியா என்னும் பிருத்தானிய கப்பல்மீது குண்டுகள் பெய்யப்பட்டபோது, அது பகைவருக்குரிய ஆகாயவிமான மொன்றைச் சுட்டு வீழ்த்திப் பின்னர்ப் பகைவர் குண்டுகளினால் உடைந்து கடலுள் அமிழ்ந்தியதாம்.

சியநாட்டின் பழைய அரசர் தேகவியோகமாயினர்

சியநாட்டின் பழைய அரசராகிய பிரசாதிபோக் என்பவர் இங்கிலாந்திலுள்ள சரேயென்னுமிடத்தில் சுவாசநோய் காரணமாகச் சடுதியில் இறந்தாராம். இவருக்கு இறக்கும்போது வயது 47.

கிறீஸ் யுத்தம்

ஜர்மனியர் மேலும் மேலும் சைனியங்களைக் கொண்டுவந்து கொட்டுகின்றனர்

ஜர்மனியர் ஆகாயவிமானங்கள் மூலமாக மேலும் மேலும் தம் சைனியங்களைக் கொண்டுவந்து சொரிகின்றார்களாம்.

பிருத்தானிய கிரேக்க சைனியங்கள் சுடாவிரிகுடா கனியா என்னுந் தானங்களை விட்டுப் பின்வாங்கவேண்டி நேர்ந்ததாம், றெருக்கேவில் இன்னமும் பிருத்தானியர் பகைவரை எதிர்த்துக் கடுஞ்சமர் புரிகின்றனர்.

ஜர்மனியர் தெரிவிப்பன:

கிரீற்றில் கிரேக்க சேனாபதி சரண்புக உடன்பட்டார்; சென்ற புதன்கிழமை இத்தாலிய சைனியமும் கிரீற்றில் வந்திறங்கி மேற்குப் பக்கமாக முற்பட்டுச் செல்லுகின்றனர். சிதறுண்ட பிருத்தானிய படை ஜர்மனிய படையால் துரத்தப்பட்டு ஓடுகின்றன. பலர் சிறைபாக்கப்பட்டனர், பல தாங்கிகளும், ஆயுதங்களும் குண்டு மருந்துகளும் கைப்பற்றப்பட்டன. பகைவர் சிறைபிடித்து வைத்திருந்த ஜர்மனிய இத்தாலிய போர்வீரர் சிறையிலிருந்து ஜர்மனியரால் விடுதலை செய்யப்பட்டனர். ஜர்மனிய ஆகாயப்படை பிருத்தானிய ஆகாயப் படையைத் தாக்கிப் பிருத்தானியருக்குரிய 2 டிஸ்றோயர்க் கப்பல்களைக் கடலுள் அமிழ்த்தியனவாம்.

இத்தாலியர் தெரிவிப்பன:

"இத்தாலிய சைனியம் கிரீற்றில் பிருத்தானிய சைனியத்தைத்தாக்கிச் சமர்புரிந்து சில நூற்றுக்கணக்கான வீரர்களைச் சிறைப்படுத்திவிட்டதாம். கிழக்கு மத்தித்தரையில் நின்ற பிருத்தானிய கடற்படையை இத்தாலியர் ஆகாயப்படை கொண்டு தாக்கியபோது அவை ஜிப்ரூல்ற்றரை நோக்கிச் செல்கின்றனவாம்."

கிரீற்றிலுள்ள தந்தி தெலிபோன் முதலிய சமாசார சாதனங்களைப் பகைவர் சிதைத்துவிட்டமையினால் அங்குள்ள யுத்தநிலைமையை உள்ளபடி தெரிவிக்க முடியவில்லையாம்.

இத்தலிய கப்பல்கள் அமிழ்த்தப்பட்டன

இத்தலியருக்குரிய கெயர்லூட் என்னும் டிஸ்றோயர்க் கப்பலும் கொன்ரி ரேஸோ என்னுங் கப்பலும் கடலுள் அமிழ்த்தப்பட்டனவாம். அக்கப்பல்களிலுள்ள சைனிய வீரருட் பலர் மீட்கப்பட்டனராம்.

இதுவரையில் அமிழ்த்தப்பட்ட அமெரிக்க கப்பல் 28.

அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்திற்கு யுத்தப்பொருள்கள் கொண்டு போன அமெரிக்க கப்பல்களுள் யுத்தம் தொடங்கிய நாள்தொட்டு இற்றைவரை பகைவரால் கடலுள் அமிழ்த்தப்பட்ட கப்பல்களின் தொகை 28.

திறமையான மொழி பெயர்ப்பு வேண்டும்

வழக்கு மன்றங்களிலும், கச்சேரிகளிலும் பொதுமக்களின் முறைப்பாட்டை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் ஒப்புவிக்கும் அலுவலில் ஈடுபட்டுழைக்கும் முதலியார்களென்னும் மொழிபெயர்ப்பாளர் தமிழ் ஆங்கிலமென்ற இரு மொழியினும் பாண்டித்தியம் பெற்றோரா யிருத்தல் மிக இன்றியமையாதது. அவர்கள் ஏழைப் பொதுமக்களின் கருத்துக்களைச் சிறிதேனும் சிதைக்காமல் ஆங்கிலத்தில் பெயர்க்கக்கூடிய திறமையும், பொதுமக்கள் அறியவேண்டுவனவற்றை, துரையவர்களின் கருத்துக்களை சிறிதும் விடாது நேரே தமிழில் மொழிபெயர்க்கவும் திறமையும் சிறப்பாகப் பெற்றிருத்தல் வேண்டும்.

அவர்கள் பொதுமக்கள்கூறும் முறைப்பாட்டை நேரே மொழிபெயர்த்துக் கொடுக்கமுடியாது. பிழைபடமொழிபெயர்ப்பதால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். ஒருசொல்லின் பொருளுக்கு மாறான பொருளை மொழிபெயர்ப்பாளர் கூறுவதால் வழக்குகள் நிலைகுலைந்து போகின்றன. குற்றவாளி குற்றமற்றவராயும் சுத்தவாளி குற்றமுடையவராகவும் எண்ணப்படுகின்றார்கள்.

இங்ஙனே ஒருவர் அரசியலாருக்கு அறிவிக்கும் மனுப்பத்திரங்கள்(பெட்டிசங்கள்) முதலியவற்றை மொழிபெயர்ப்பாளர் பிழைபட மொழிபெயர்த்து ஒப்புவித்தால் அவ்வேண்டுதலாளர் (பெட்டிசகாறர்)தாம்கருதிய பயன் இழப்பதுடன் அரசியலாரிடத்து வெறுப்பையும் பெற்றுக்கொள்ளுகின்றனர். இதனைப்பெரிதும் அரசாங்கசபையிலிருக்கும் தலைவர்களும் பொதுஜன சமூகத் தொண்டில் ஈடுபட்டிருக்கும் அன்பர்களும் கருத்தூன்றிப் பார்த்து வேண்டிய ஒழுங்குகள்செய்ய முற்படவேண்டும்.

மொழிபெயர்ப்பாளர்கள் பிழைபட மொழி பெயர்க்கிறார்களென்பதை வழக்குமன்றங்களில் வழக்கறிஞர்கள் முதலிமார் பெயர்த்த பொருள்முடிபுகள் பிழையினவென்று தாம்அவர்கள்முன்னிலையில் திருத்தி மொழிபெயர்த்தலை நேரே காண்கின்றோம்.

கச்சேரிகளில் வழக்கு மன்றங்களிலும் மொழிபெயர்ப்பாளர்கள் விடும் மொழி பெயர்ப்புப் பிழைகள்பல. இதனை அரசினருக்கு வேண்டுதல்செய்யும் அறிக்கைகளில் வேண்டிக்கொண்ட செய்திகளை நேரே விளங்கும்பொழுது மொழிபெயர்ப்பாளர்களின் மொழிபெயர்ப்பைப் பிறர்திருத்துவதை நேரே காண்கின்றோம்.

சிறப்பாகத்தற்காலிகமாகக்கடமையாற்றிவரும் முதலிமார்மொழிபெயர்ப்பாளர் கருத்துக்களைச் சிதைத்து மொழிபெயர்த்தலை கண்ணூடாகக் காண்கிறோம். இன்னும் [illegible] சரிப்படுத்தத் தம்மாலியன்றவரை முயற்சிசெய்கிறார்கள். இதனும் பொதுமக்கள் பெரிதுமிடர்ப்படுகிறார்கள். பொது மன்றங்களில் மக்களின் தாய்மொழியில் விசாரணை நடைபெற வேண்டுமென்ற சிலஅறிஞர்கள் கருத்தும் பெரிதும் பயனுடைத்தென்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இவ்விஷயத்தைக்குறித்து முன்னொருகால் இந்துசாதனத்தில் வெளியிடப்பட்டிருந்தமை நினைவுக்கு வருகிறது. ஆகவே இதுசெய்தியையிட்டு வேண்டிய ஒழுங்குகள் செய்வதற்கு ஏற்றநிலையில் அறிவுடை உலகம்விழிப்புடன் தொண்டாற்றுமென எதிர்பார்க்கிறேன்.

அடிஞ

வண்ணை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோவில்

மகேசுர பூசையும் அலங்காரோற்சவமும்

நிகழும் விஷு வருஷம் வைகாசி மீ 27-ந் திகதி சோமவாரதன்று பகல் வண்ணைநகர் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் விசேட அபிஷேக ஆராதனையும், மகேசுர பூசையும், அன்னதானமும் அடுத்தநாள் மங்கலவாரதன்று பகல் அன்னதானமும், இரவு கணக்கர் பிள்ளைகளுடைய செலவில் உயர்ந்த மேளவாத்திய சிவகாம பஜனை முதலிய வற்றோடு ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி வெள்ளி மயூரவாகனரூடராய்த் திருவீதி வலம்வரும் திருவுலாக் காட்சியும், அடுத்தநாள் புதன்கிழமை பகல் அன்னதானமும் நடத்தப்படும்.

வெள்ளவத்தை
ஸ்பின்னிங் அன் வீவிங் மில்ஸின்

புடவைகள்

இப்போது யாழ்ப்பாணத்திலொவ்வொருவீட்டிலும்
பேசப்படும் வார்த்தைகளாம்

ஒருமுறை பரீக்ஷித்தால்—
எப்போதும் விரும்பப்படுவது.

ஒவ்வொருவிதமான டிஸைனிலும் நாம் புடைவைகளைச்
செய்கிறோம்.

வேட்டிகள்
சால்வைகள்
சேலைகள்
சாரங்கள்
கம்பாய்கள்
துவாய்கள்
லோங்குளோத்ஸ்
மல்லுகள்
பெட்ஷீட்டுகள்
டிரில்லுகள்
சூற்துணிகள்
ரசூர்கள்
'ஷேட்' துணிகள்
ஷீட்டுகள்
பஞ்சணைஉறைகள்
மேசைத்துணிகள்
பப்ளின்கள்
யன்னல்துணிகள்

முதலிய இன்னும்பல எம்மிடம் உண்டு.
எங்கள் சில்லறைக் கடைக்கு வாருங்கள்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.
வெள்ளவத்தை ஸ்பின்னிங் அன் வீவிங்மில்ஸ்,
(இந்தியாவில் ஸ்தாபிதமானது):
(அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

Mis 127 19.12.40.

முதல் தரமான
சிகிச்சை.
மூல - வியாதிக்கு
ஆப்பரேஷன் வேண்டாம்.
மூலமுளைகள், ரத்தம், சீழ்வடிதல்,
மூலபவுத்திரம், வாய்வு, மலச்சிக்கல், குணமாகும்.
மூலத்தின் அவஸ்தைகள் 3 வேளையில் நீங்கும்.
ஆயிரக்கணக்கான பேர்கள் சுகப்பட்டிருக்கிறார்கள்.
கருணைக்கிழங்கினால் தயாரிக்கப்பட்ட மூலரோக நிவாரணி லேகியம்.
20நாள் ரூ 6-0-0. விபரமான கேட்லாக் இனாம்!
தண்டபாணி வைத்திய சாலை,
96.செட்டியார்தெரு,கொழும்பு. தலைமை ஆப்பீஸ் - பழனி.

Mis 204 A 13-3-41—

வெளிவந்துவிட்டது!

புதிய வெளியீடுகள்

சிவிக்ஸ் (Civics) எனப்படும்

குடி இயல் நூல்

6-ம் வகுப்புக்குரிய முதற்புத்தகம் விலை சதம் 50
7-ம் வகுப்புக்குரிய இரண்டாம் புத்தகம் விலைசதம் 50

யாழ்ப்பாணம்
சைவபரிபாலன சபைப்
பிரசுரமாக அச்சிட்டு வெளிவந்துவிட்டது

மானேஜர்,
சைவப்பிரகாச யந்திரசாலை,
யாழ்ப்பாணம்.

S. S. C. பரீக்ஷை இலக்கியம் (1941)

பாரதம்-கிருஷ்ணன்றூது சருக்கம

மூலமும் உரையும்

பல வருடங்கள் J. S. C.; S. S. C. பரீட்சை இலக்கியங்களுக்கு விசேடமாகிய உரைநூல்கள் இயற்றி வெளியிட்டவரும், பண்டித, பாலபண்டித; பரீட்க்ஷை வகுப்புக்களுக்குப் போதித்த அநுபவம் வாய்ந்த இயற்றமிழ்ப் போதகாசிரியரும், வண்ணார்பண்ணை-நாவலர் வித்தியாசாலைத் தலைமையாசிரியருமாகிய **திரு. வித்துவான், ந. சுப்பையாபிள்ளை அவர்கள்** மேற்படி பரீட்சைக்காகிய முறையில் இயற்றிய விசேட விரிவுரையுடன் அச்சிடப் பெற்றுள்ளது.

பிரதி எம்மிடத்திலும் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதியொன்றன் விலை ரூபா 1 சதம் 10

தொகையாக வாங்கும் ஆசிரியர்களுக்கும் வியாபாரிகளுக்கும்
தக்க கழிவு கொடுக்கப்படும்

இந்துசாதனம்
20.8.40

மனேஜர்.

கீர்த்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேனவும் பட்டார். அப்பெருமானை நீ சரணமடை. அவருபாசனையால் உன் கவலையெல்லாம் வெங்கதிர் கண்ட தண் பனிபோற் சடுதியில் மறையும். உனக்கு இன்பமும் பெருகும்" என்று வரமருளி அவளுக்கு அவ்வுபாசனா விதங்களையும் உபதேசித்துப் போய்விட்டார். கீர்த்திதாய் கருத்தனமிழந்தவன் அதனை மீளப் பெற்றது போலக் கரையற்ற மகிழ்ச்சி கொண்டு தற்கொலைத் தீர்மானத்தைக் கைவிட்டுக் கண்ணுதற் பெம்மான் புண்ணிய மகனார் பூசைக்குச் சித்தமாயினள்.

கீர்த்தியின் மாளிகைக்கருகில் மந்தார மாமொன்று நந்தாத நிழல் செய்ய ஆண்டு மூத்தபிள்ளையார் ஒருகோடும் இருசெவியும் மும்மதமும் நாலவாயும் ஐங்கரமும் விளங்கத் திருக்கோயில் கொண்டிருந்தார். கீர்த்தி அவரையே தனது உபாசனா மூர்த்தியாகக் கொண்டாள். தோழியர் நாடோறும் தவறாமல் அறுகு முதலியன எடுத்து வருவர். அரசி விடியலில் எழுந்து முழுக்கு முதலியன முடித்து முழுநீறு பூசிப் பூசைக்கோலங் கொள்வாள்.

அறுகு முதலியன குறிப்பிட்ட நேரத்தில் வந்து சேரும். கோப்பெருந்தேவி மாபெருந்தேவர் முன் உட்கார்ந்து அவரை நியமந்தவறாது அறுகுகொண்டருச்சித்துப் பிறகு எழுந்து நின்று கைகள் தலைமேற் குவியக் கண்கள் வெள்ளமபொழிய மெய்யும் மயிர் பொடிப்பக் குரலுந் தழுதழுப்ப ஆனந்த பரவசத்தளாய்,

"ஐயா மறைமுடிவுந் தோராத
வானந்த
மெய்யா பிரணவத்தி னுட்
பொருளே வேழமுகக்
கையாய் வெளியாய் கரியானே
பொன்மையாய
செய்யாய் பசியாய் பெருங்
கருணைத் தெய்வமே.
சூரனுயிருண்டு சுரருலகங்
காத்தளித்த
வீரனுக்கு முன்பிறந்த வித்தகா
முப்புரமுஞ்
சேர வுருத்த திருவான
னின்றெடுத்த
வாரணமே வெந்தாய் வலம்புரிக்
குஞ்சரமே.
பண்ணியமும் வெண்கோடும்
பாசாங் குசப்படையு
நண்ணியசெங் கைத்தலத்து
நாதா வொருகோட்டுத்
தண்ணிய வெண்ணிலைறத்
தாழ்சடையாய் மெய்யடியா
ரெண்ணிய வெண்ணியாங்
கீந்தருளும் வள்ளலே"

என்று தோத்தரிப்பாள். பின்னர் அவள் இருக்கைபுக்கு உணவருந்துவாள். இந்தவிதமாக அவள் வாழ்வு சில மாதங்களாகக் கழிந்து வரும்போது ஒருநாள் தோழியர் எங்கெங்குச் சென்றும் பூசைக்கு அறுகு அகப்பட்டிலது. ராணிக்குக் கோபம்வருமே யென்செய்வோமென அவர்கள் அஞ்சினர்கள். கடைசியாக அவர்கள் அறுகுக்குப் பிரதியாக வன்னிப்பத்திரம் பறித்துக் கொண்டுபோய் அரசி முன் வைத்து "அம்மணி! இன்று அறுகு கிடைக்கவில்லை. வன்னிப்பத்திரம் கொணர்ந்தோம். இன்று மட்டும் இறைவனை இதனால் அர்ச்சியுங்கள். நாளை நாங்கள் வேறு திசைக்கேகி அறுகு எடுத்து வருகோம்" என விண்ணப்பித்தார்கள். கீர்த்தி வேறுவழியில்லாமையால் அவ்வாறே அண்ணலார்க்கு ஆராதனை இயற்றி அறுகருச்சனை செய்யாததோடமேங்க அன்று முழுவதும் உணவொழிந்திருந்தனள். இரவும் வந்தது. அவளும் உறக்கங் கொண்டாள். மூன்று யாமங்கள் கழிந்தன. நாலாம் யாமத்தில் அவள் கனவொன்று கண்டாள். அப்போது விக்கினராஜ பிரசன்னரானார். அமர் தமது அருள் கொழிக்குங் கண்களால் அவளைப் பார்த்து "அம்மே! உனது மெய்யன்புக்குவந்தேம். நீ சிந்தைகூரன்பிற சாத்திய வன்னியிலையை இதோ என் சென்னியிற் பார். வேண்டும் வரங்களை ஏண்டே வினவுதி" என்றார். பட்டத்தரசி உமாசுதரது பாதபத்மங்களிற் பதிய வைத்த தனது சேதாபதமங்களை வாங்காமல் குனிந்ததலை குனிந்தபடி இன்றுலேயன்றி வாயொன்றுங் கேட்கவொழாதவளாயினள். வலிய வருளும் வள்ளலாகிய பிள்ளையார் "கீர்த்தி! உன் மாற்றாள் செய்த வஞ்சனை சகிக்க முடியாததான். பிரியவிரதன் உன்னிடம் மிகவும் பிரியமடைவான். விரைவில் நன்மகனொருவன் உன் வயிற்றிற் சனிப்பான். இப்ரப்பிரசாதனென்று அவனுக்குப் பெயரிடு. உன் மாற்றாள் நோயுற்று அழகிழப்பள். உன் மகன் ராஜமாண்டெய்தியதும் அவள் அவனுக்கு நஞ்சூட்டுவள். நீ அப்போது பயந்து விடாதே. அவனைக் கிருச்மதர் என்னும் முனிவரிடம் எடுத்துக் கொண்டு போ. அவர் அவனுக்கு உயிரளிப்பார்" என்று அவளுக்கு அநுக்கிரகித்து அந்தர்த்தானமாயினர். பின்னை மனம்படைத்தபெருமாட்டி உடனே விழித்தெழுந்து 'எம்பெருமானாரின் அருளிருந்தவாறு' என்றெண்ணினள். விரைவிற் பொழுதும் விடிந்தது.

—சிவநேசன்

திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

மீ. 396

செவ்வாய் யூன் 3

முதலாவது ஒலிபரப்பு

காலை 7.30 ஆரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7.50 ஆர். விச்வநாதன் பாட்டு 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 வீணை (இசைத்தட்டு) 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 கிருப்பங்கள் (இசைத்தட்டு) 1.15 என். வி. வஸந்த கோகிலம் (இசைத்தட்டு) 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.35 டி. எல். வாசுதேவன் பாட்டு 2.00 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்திய கீதம் 5.15 டி. எல். வாசுதேவன் பாட்டு 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 குமாரி கமலா குமாரி விமலா பாட்டு 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 நம் யுத்த முயற்சி பேச்சு 7.15 இன்னிசை (இசைத்தட்டு) 7.30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.50 குமாரி கமலா, குமாரி விமலா பாட்டு 8.45 நாட்டிய சங்கீதம் 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

புதன் யூன் 4

முதல் ஒலிபரப்பு

காலை 7.30 ஆரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7.50 திரைகானம் (இசைத்தட்டு) 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 சேலம் திரு. தேசிகன் பாட்டு 9.00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 சங்கீதம் (இசைத்தட்டு) 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 குமாரி பூமா பாட்டு 2.00 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5.00 வாத்திய கீதம் 5.15 கீரனூர் சின்னத்தம்பி பிள்ளை நாதஸ்வரம் 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 குமாரி சூடாமணி (இசைத்தட்டு) 6-15 இசைப்பயிற்சி 6 30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 சட்டச் சுருள் 7.15 அப்துல்கரீம் கான் (இசைத்தட்டு) 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.50 கீரனூர் சின்னத்தம்பி பிள்ளை நாதஸ்வரம் 8-30 எங்கள் தபால்பெட்டி 8.40 சேலம் ஜி. தேசிகன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு

வியாழன் யூன் 5

முதல் ஒலிபரப்பு

காலை 7.30 ஆரம்பம் 7.40 தமிழில் செய்திகள் 7-50 எச். வி. ராமராவ் வயலின் 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.25 மாதர் இன்னிசை (இசைத்தட்டு) 9-00 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

1.00 குரல் வகைகள் (இசைத்தட்டு) 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 எச். வி. ராமராவ் வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2.05 கோடைக்கல்வி 2.30 ஒலிபரப்பு முடிவு.

மூன்றாவது ஒலிபரப்பு

மாலை 5-00 வாத்திய கீதம் 5.15 டாக்கிகானம் (இசைத்தட்டு) 6.00 ஆங்கிலத்தில் செய்திகள் 6.05 கே. வி. தியாகராஜன் பாட்டு 6.30 கிராமாந்திர நிகழ்ச்சிகள் 7.00 செய்திகளின் ஆதாரம் 7-15 வாழ்க்கைப் பலகணி 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் ரேடியோக்கச்சேரி 7.50 டி. ஆர். மகாலிங்கம் புல்லாங்குழல் மருங்காபுரி கோபால கிருஷ்ணையர் வயலின் தஞ்சாவூர் வி. எஸ். வைத்யநாதய்யர் மிருதங்கம் 9.20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 10.00 ஒலிபரப்பு முடிவு.

மலையுச்சியின் கொடூர வெய்யில்!

தாகசாந்தித் தருமம்.

ஸ்ரீ கதிர்காம க்ஷேத்திரத்தில் கே. வீ. மார்க்கண்டு மடத்துப் பக்கமாகச் சென்ற 11 வருடமாக அடியார்கட்குத் தாகசாந்திக்காக ஒரு தண்ணீர்ப்பந்தல் செல்வக் கதிர்காமம் போகும் கடப்பாதையில் பெரியோர்களின் உதவியால் அடியேனால் நடைபெற்று வந்தது.

மேலும் அநேகருடைய வேண்டுகோளுக்கிணங்கிச் சுவாமி மலைக்குப் போகும் பழைய பாதையிலும் தண்ணீர்ப் பந்தல் அமைத்துத் தாகசாந்தி அளிக்க நிச்சயித்துள்ளேன். ஆதலால் தர்மப் பிரபுக்கள் இயன்ற பொருளுதவி செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
தொண்டன்
சங்கரப்பிள்ளை முருகேசு,
(கொட்டைக்காடு) தொல்புரம்
யாழ்ப்பாணம் சுளிபுரம்.

Mis 31 12.5.41 . 11.6.41

வாலிபருக்கு 3வருஷ நன்னடத்தைப் பிணை

தந்தையின் 'செக்'கில் மைந்தன் கள்ளக் கையொப்ப மிட்டார்

வெள்ளவத்தையைச் சேர்ந்த கே. வால்டர் பெரேரா என்பவர் அவரது தந்தை மிஸ்டர் ஏ. ஜே. பெரேரா வின் செக்புத்தகத்திலிருந்து ஒரு தாளை இம்மாதம் 14ந் திகதி திருடியதாகவும் மேற்படி செக்கில் மிஸ்டர் ஏ. ஜே. பெரேரா வைப்போலக் கள்ளக்கையொப்பமிட்டு மலிபான் தெருவைச் சேர்ந்த மிஸ்டர் கோதாகோடை என்பவரிடம் மேற்படி செக்கைக் கொடுத்து ரூ. 500 பெற்றுக்கொண்டதாகவும் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில மூன்று வருடகாலத்திற்கு ரூ. 500 நன்னடத்தைப் பிணையிலிருக்கும்படி எதிரிக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரியின் சார்பிற் பேசிய வழக்கறிஞர் எதிரிக்கு இரக்கங்காட்டும்படி கேட்கும்போது எதிரியின் தந்தை மிஸ்டர் கோதாகோடைக்கு முழுத்தொகையையும் செலுத்திவிட்டதாகக் கூறிக் கோதாகோடையிடம் பெற்ற பற்றுச்சீட்டையுங் காண்பித்தார். மேலும், எதிரியின் தகப்பன் எதிரிக்குத் தண்டனை விதிக்கும்படி வற்புறுத்தவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

எதிரியின் தந்தையிடமிருந்து முழுத் தொகையைப் பெற்றுவிட்டதாக மிஸ்டர் கோதாகோடை நீதிபதியிடம் தெரிவித்துக்கொண்டார்.

ஸ்ரீ ஆனே-கவர்னர் சந்திப்பு

நாகபுரி, மே 26

இந்திய சட்டசபையில் காங்கிரஸ் தேசியகட்சித் தலைவராகவுள்ள ஸ்ரீமான். எம். எஸ். ஆனே மத்திய மாகாணக் கவர்னருடன் நேற்று மாலை கலந்து பேசியதாகத் தெரிகிறது. ஸ்ரீமான் ஆனே சம்பாஷணை முடிந்ததும் ஜோதிமாலுக்குப் புறப்பட்டுவிட்டார்; கவர்னரும் பாச்மார்ஹிக்குப் போய்விட்டார்.

இலங்கைப் பொருள்கள் விற்பனை ஸ்தலம்

கட்டிடத்தை வாங்க அரசாங்கத்தார் உத்தேசம்

சதாம் வீதியிலுள்ள இலங்கை விளைபொருள்கள் விற்பனை ஸ்தலக் கட்டிடத்தை அரசாங்கத்தார் கிரயங் கொடுத்து வாங்க உத்தேசித்திருப்பதாகவும் இவ்விஷயம் பற்றி ஆலோசிக்கப் படுவதாகவும் தெரிகிறது. மேற்படி கட்டிடத்தின் கிரய ரூபா 2,65,000 ஆகும்.

உள்நாட்டுவிளைபொருட்களை அபிவிருத்தி செய்வதற்குப் பொருத்தமான ஒரு மத்திய ஸ்தலத்தில் மேற்படி கட்டிடம் அமைக்கப்பெற்றிருக்கிறது. அங்கே மார்க்கெற்றிங் இலாகாக் காரியாலயமும் இலங்கை விளைபொருட்கள் விற்பனை ஸ்தலமும் இப்பொழுது இருக்கின்றன.

இலங்கை விளைபொருள்கள் நிலையம் ஒரு மத்திய ஸ்தலத்தில் அமைக்கப்பட்டிருந்தாற் சுற்றுப் பிரயாணிகளும் வெளியூர் வாசிகளும் அதை மிக எளிதிற் கண்டுபிடித்துப் பார்வையிடக் கூடும்.

மேற்படி கட்டிடத்தை வாடகைக்கு ஒழுங்கு செய்வதைவிட மேற்படி தொகைக்குக் கிரயமாக வாங்குவதே நலமென்று அரசாங்க அதிகாரிகள் கருதுகின்றனர்.

இப்பொழுது மேற்படி கட்டிடம் வாடகைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறது.

வியாபாரத்திற்கு
அழகு
விளம்பரம் செய்தல்

தி மலாயன்
டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்
கள் சிமேந்து வகைகள்
விற்பனவு செய்வோர்
பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரோப்ரைட்டர்"
K. A. இரத்தினசிங்கம்
Y. 19 4-3-41—3-3-42.

மெலிந்து
சோர்வுற்று
பலமிழந்து
ஊக்கமற்று
இருக்கும்
சகலருக்கும்
ஓர் விசேஷச்
செய்தி

ஜீவாதார உலோக சத்துக்களடங்கிய
இந்தச்சிறந்த சாதனம் உங்களுக்குப்புதிய
ஆரோக்கியமும் ஊக்கமும் பலமும் அளிக்கும்

பழனி சி. எம். சாமி அரல் தங்கபஸ்பத்தை இன்று முதலே சாப்பிட்டு வாருங்கள். உஷ்ணம், மேகம், கடுப்பு, மூலம், சீரீழிவு, வாதம், தொய்வு, க்ஷயம், குன்மம் இவைபோன்ற ஏனைய எல்லா நோய்களும் நீங்கிவிடும். கண்டிப்பாகம் பலனடைவீர்கள். தேகம் பூராவும் புது ரத்தம் பாயும். பசி ருசியுண்டாகும், நரம்புகள் வலுவடையும், கண்கள் பிரகாசமடையும். நீங்கள் வாலிப பலமும் தேக திடகாத்திரமும் அடைவீர்கள்.

24 நாள் பஸ்பம் விலை ரூபா 10

தலைமை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S I
கிளை ஆபீஸ்:- மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை
கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

221 31-Y3-41—30.3.42

N. வைத்திலிங்கம்
& கம்பெனி
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

கட்டிடங்களுக்கு வேண்டிய முதல்தரமான சாமான்கள்
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலிய இடங்களில் செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகலசாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE
38, 3rd Cross Street,
Colombo.
Telephone No. 30.

(Y 20 1-4-41—31-3-42) தி

யாழ்ப்பாணம்
ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.
வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா 134,36700
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமயம் சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 8 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என் மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

YS A. 21-11-39—20-11-40
திஎ.

பத்திரக்கிரயம்

வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினசங்க எல்லைக்குள்
தமிழ் ரூபா 5.00 இங்கிலீஷ் தமிழும் 9.00
இலங்கை இந்தியா 8.00 இங்கிலீஷ் தமிழும் 12.00
தொலைதேசப் பகுதி 9.00 இங்கிலீஷ் தமிழும் 13.00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக
அனுப்பப்படல் வேண்டும்

விளம்பர விகிதம்

முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 10-00 அரைக்கலம் ரூபா [illegible]
கால்கலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 1-00
அடுத்த முறைகட்கு மேற்படி
விகிதங்களிற் பாதி
[illegible]

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 2nd June, 1941.